
# மகா கும்பாபிஷேக மலர்



## ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தானம்

08.12.1993

255.22
சர்வா
SLIPR

*With Compliments*

❊

❊

❊

**CEYLON THEATRES LTD.**

**MILLERS LIMITED**

**CARGILLS (CEYLON) LIMITED**

**C. T. LAND DEVELOPMENT LTD.**

உ
சிவமயம்

# சமர்ப்பணம்


கஜானனம் பூதகண நாதசேவிதம்
லம்போதரம் பக்தஜன ரக்ஷகம்
கும்பாபிஷேக சித்தியர்த்தம்
விநாயகம் நமாம்யகம்

ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானது

பாதார விந்தங்களில்

இம் மலரைச்

சமர்ப்பிக்கின்றோம்!



# விநாயகர்

உருகுமடியார் உள்ளூர
உள்ளே ஊறும் தேன் வருக
உண்ணத் தெவிட்டாச் சிவானந்த
ஒளியே வருக புலன்வழி போய்த்

திருகும் உளத்தார் நினைவினுக்குச்
சேயாய் வருக எனையாண்ட
செல்வா வருக உமையீன்ற
சிறுவா வருக இருவிழியாற்

பருகும் அமுதே வருக உயிர்ப்
பைங்கூழ் தழைக்கக் கருணைமழை
பரப்பும் முகிலே வருக நறும்
பாகே வருக வரை கிழித்த

முருக வேட்கு முன்னுதித்த
முதல்வர் வருக வருகவே
மூரிக் கலைசைச் செங்கழுநீர்
முனியே வருக வருகவே

(சிவஞான முனிவர் - செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்)



UNITED

உ

ஓம் கணபதி துணை

## சிவநெறிச் செல்வர் ஆ. சின்னத்தம்பி, ஜே. பி.
## பரிபாலன சபைத் தலைவர் அவர்களது

# வாழ்த்துச் செய்தி

சர்வ விக்கினங்களையும் தீர்த்தருளும் முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தான ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 1993.12.08ந் திகதி நிகழ்வதற்குப் பிரணவ சொரூபியாகிய விநாயகப் பெருமான் திருவருள் பாலித்துள்ளார்.

மிகப் பழமை வாய்ந்த பெருமைமிக்க ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தானம் சந்திரசேகர முதலியார் அவர்களால் தாபிக்கப்பெற்ற பெருமையுடன் திகழ்கிறது. 1955ஆம் ஆண்டுவரை தேவஸ்தான கர்த்தா பரம்பரையினரது நிருவாகத்தில் தேவஸ்தானம் விளங்கியது. கொழும்பு மாநகரிலுள்ள அன்பர்களும், இலங்கையின் பல பாகங்களிலிருந்து வருகை தரும் அடியார்களும் சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானை முகத்துவாரத்தில் வந்து தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுச் செல்வது வழமையாகும்.

ஆடி அமாவாசைத் தினத்திலும், ஏனைய உற்சவ காலங்களிலும், சாதி, மத, இனபேதம் எதுவுமின்றி பக்தர்கள் விநாயகப் பெருமானது அருள் பெற்று மகிழ்வது சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததாகும்.

ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானைத் தரிசிக்க வரும் அடியார்கள் மகாசக்தி வாய்ந்த காளியம்மன் ஆலயத்தையும் தரிசித்துப் பிரார்த்தனையுடன் நேர்த்திக்கடன் செய்து இஷ்ட சித்திகளைப் பெறுவது வழமையானது.

அடியார்கள், அன்பர்கள், கொடை வள்ளல்கள், ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தானத் திருப்பணிக்கும், காளியம்மன் கோயில் திருப்பணிக்கும் வாரி வழங்கியதன் காரணமாக திருப்பணி வேலைகள் யாவும் திருப்திகரமாக நிறைவுற்று மகா கும்பாபிஷேகம் நிகழ்வது அடியார்களது நீண்டநாள் ஆவலை நிறைவேற்றுவதற்கு விநாயகப் பெருமானும் காளி அம்பாளும் திருவருள் பாலித்திருப்பதாகவே கருதுகின்றேன்.

1955 ஆம் ஆண்டு முதலாக, எஸ். செல்லமுத்து அவர்கள் தருமபரிபாலன சபையின் நிருவாகத்தின் கீழ் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தானத்தை ஒப்படைத்த பின், தேவஸ்தானம் பலவகையிலும் முன்னேற்றமடையத் தொடங்கியது. அன்பர்கள் உரிமையுடன் தேவஸ்தானத்திற்கு உதவ முன்வந்தனர். அதன் பலனாகவே இன்றும் மஹோன்னதமான முறையில் திருப்பணி வேலைகளை நிறைவேற்ற முடிந்தமைக்கு ஸ்ரீ சர்வார்த்த சித்திவிநாயகப் பெருமானது திருவருளை நினைந்து பூரிப்படைகிறேன்.

திருப்பணி வேலைகள் நிறைவுபெற்றுப் புதுப்பொலிவுடன் திகழும் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானது தேவஸ்தானம் வழிபடும் அடியார்களது மனதில் உள்ள அபிலாஷைகளை விக்கினங்கள் எதுவுமின்றி நிறைவேற்றி வைக்க வேண்டும் என்றும், கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் யாவும் விநாயகப் பெருமானது அளப்பருங் கருணையினாலே இனிது நிறைவேற வேண்டும் என்று ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானது பாதார விந்தங்களைப் பிரார்த்தித்துப் பெருஞ் சாந்திப் பெருவிழாவாகிய கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் யாவும் மங்களகரமாக நிறைவு பெற எனது மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது நாட்டிலே சாந்தி, சமாதானம், அமைதி யாவும் பொலிந்து மக்கள் யாவரும் இன்பமாக வாழ விநாயகப் பெருமான் அருள் பாலிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

ஆ. சின்னத்தம்பி
பரிபாலனசபைத் தலைவர்

ශ්‍රී ලංකා ජනාධිපති

இலங்கை சனாதிபதி

President of Sri Lanka

கொழும்பு முகத்துவாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேச விழாவை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பேருவகையடைகின்றேன். திருப்பணி வேலைகளுக்குப் பின்னர் எடுக்கும் கோவில் திறப்பு விழா மகா கும்பாபிஷேகம் எனப்படும்.

ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தானம் கொழும்பு மாநகரத்தில் உள்ள மிகப்பழைய கோவிலாகும். நாடெங்கிலும் உள்ள பக்தர்கள் இந்தத் தேவஸ்தானத்திற்கு வழிபாட்டுக்காக வருகை தருகின்றனர்.

இத்தேவாலயத்தின் திருப்பணிவேலைகளை மிகவும் சிறப்பாகவும் விரைவாகவும் பூர்த்தி செய்வதற்கு அயராது உழைத்த ஆலய பரிபாலனசபைக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றேன்.

இந்த " மகா கும்பாபிஷேகம் " எமது தாய்நாட்டுக்கு அமைதியினையும் சுபீட்சத்தினையும் கொண்டுவர எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

டி.பீ. விஜேதுங்க

சனாதிபதி.

1993 திசெம்பர்.02 ஆந் திகதி.

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

I am pleased to send this Message on the occasion of the **"Mahakumbabishekam"** **of the Sri Sarwartha Sidhi Vinayakar Devasthanam** in Mutwal. I understand that the **"Mahakumbabishekam"** is a Special Pooja, undertaken to mark the Opening of the Temple after renovations.

The Sri Sarwartha Sidhi Vinayakar Devasthanam is one of the oldest temples in the city of Colombo. Devotees from all over the country congregate to worship at this Temple.

I congratulate the Board of Trustees for having completed the renovations so meticulously and so speedily.

May the **Blessings of the Deities** and that of the **"Mahakumbabishekam"** bring Peace and Prosperity to our Motherland.

D.B. Wijetunga
PRESIDENT

1st December, 1993.

## மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆசிச் செய்தி

கும்பாபிஷேகம் என்பது புதிதாக ஒரு கோயில் அமைத்து, மூர்த்திகளை பிரதிட்டை செய்வதையடுத்து அல்லது பாதிப்புற்ற ஆலயத்தின் புனருத்தாரணத்தையடுத்து செய்யப்படும் ஒரு சமய விழாவாகும்.

கொழும்பு, முகத்துவாரத்திலுள்ள ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகராலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேக வைபவத்தையிட்டு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

விழா இனிது நிறைவுபெற எனது மனமார்ந்த ஆசிகள்.

ரணில் விக்கிரமசிங்க
பிரதமர்

## *HON. PRIME MINISTER'S MESSAGE*

*Kumbabishekam is understood to be the consecration ceremony celebrated on initial installation of the deities in a Temple or on completion of renovation of the Temple once in twelve years.*

*It gives me great pleasure to convey my good wishes and greetings on the occasion of the Kumbabishekam ceremony at Sarvartha Siddhi Vinayagar, Mutwal on 8th December 1993.*

*I wish the celebration all success.*

***RANIL WICKREMESINGHE***
***PRIME MINISTER***

உ
கணபதி துணை

# மாண்புமிகு சௌ தொண்டமான் சுற்றுலா, கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் அவர்களது வாழ்த்துரை

திருவருள் முன்னிற்க, மோதரை காளி கோவில் எனப் பொதுவாகப் போற்றப்படும் முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் 1993.12.08 ஆம் திகதி நிகழ இருப்பதையிட்டு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை வழங்குவதிற் பேருவகை அடைகின்றேன்.

இத்தேவஸ்தானத்து மூலவராகிய ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானதும் ஏனைய பரிவார மூர்த்திகளதும் அருளை நாடிச் சைவ மக்கள் மட்டுமன்றி அனைத்து மதத்தினரும் சென்று வழிபட்டு அவர்கள் விழையும் சித்திகளைப் பெறுவது இத்தலத்தின் மகிமையாகும்.

எமது நாட்டிலே சாந்தியும் அமைதியும் சிறப்பாகத் தேவைப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கும்பாபிஷேகப் பெருவிழா இடம் பெறுகிறது மிகப் பொருத்தமானது.

கும்பாபிஷேகம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டும் என்பதுடன் பக்தர்களுக்கு விநாயகப் பெருமானதும் காளி அம்பாளதும், ஏனைய மூர்த்திகளதும் பரிபூரண கிருபாகடாக்ஷம் கிடைக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

சௌ. தொண்டமான்
சுற்றுலா, கிராமிய கைத்தொழில்
அபிவிருத்தி அமைச்சர்



காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை செல்லமுத்து 1955 முதல் 1993 வரை தர்மகர்த்தாவாக கடமையாற்றி கோவில் வளர்ச்சிக்கு அரும் பாடுபட்டவர்.

# தர்மகர்த்தா சபையினர்

ஏ. சின்னத்தம்பி
எம். பசுபதி (இப்போது வெளிநாட்டில் உள்ளார்)
கே. சின்னத்தம்பி
எஸ். கே.கணேஸ்வரன்

| | |
|---|---|
| உபதேசகர் : | திருமதி ஜி. செல்லமுத்து |
| புனரமைப்பு கும்பாபிஷேக இணைப்பு : | கலாநிதி ஏ. எஸ். குணசிங்கம் |
| முகாமையாளர் : | என். கந்தையா |
| உதவி முகாமையாளர் : | கே. பரராஜசிங்கம் |
| பிரதம குரு : | ஸ்ரீ. எஸ். இராமச்சந்திரக் குருக்கள் |
| இதர குருக்கள் : | பால கணேச குருக்கள்,<br>எஸ். பால சுப்பிரமணியக் குருக்கள்,<br>என். சோமஸ்கந்த சர்மா |
| முன்னைய தர்மகர்த்தா : | காலஞ்சென்ற எஸ். செல்லமுத்து<br>1955 முதல் 1993 வரை.<br>எஸ். சண்முகராஜா<br>கே. ஆர். இரவீந்திரன்<br>வி. எஸ். முத்துவேலு<br>டி. பொன்னம்பலம்<br>கே. சச்சதானந்த<br>பி. நாகேந்திரன் |
| கும்பாபிஷேக மலர் அமைப்பாளர் : | கலாநிதி ஏ. எஸ். குணசிங்கம் |

# Board of Trustees

Oct. 1993

A. Sinnathamby
M. Pasupati (out of the Island)
K. Sinnathamby
S. K. Ganeshwaran

**Consultant :** Mrs. G. Sellamuttu

**Coordinator Renovations and Maha Kumbabishekam :** Dr. A. S. Kunasingham

**Manager :** N. Kandiah


**Assistant Manager :** K. Pararajasingham

**Chief Priest :** Sri S. Ramachandra Kurukkal

**Other Priests :** Balakanesa Kurukkal
S. Balasubramania Kurukkal and
N. Somaskanda Sarma

**Past Trustees :** Late S. Sellamuttu (1955 to 1993)
S. Shanmugarajah
D. Ponnampalam
K.R. Ravindran
V. S. Mutuvelu
K. Satchithananda and
P. Nagendran

**Kumbabisheka Malar Compiled and Edited :** Dr. A. S. Kunasingham



## மகா சிவராத்திரியின் மகிமை

" மணிநிதி யாவும் பூக்கும்
மாசிலாத் தெருளுண்டாக்கும்
அணிசிவ கருமந் தேக்கும்
சுபம் ஐசு வரியங் காக்கும்
பணிபுனை சுந்தரேசர் பயிலு
நோன்பெவைக்கு மேலாம்
திணிதிருத் தவத்தின் முன்னும்
சிவநிசி யென்னு மாதோ "

## அபிராமியம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்;
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.





மூலஸ்தான மூர்த்திகளும்
பிரதான பரிவார விக்கிரகங்களும்





உ
ஓம் கணபதி துணை

ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்த்தான பிரதம குருக்கள்

## சிவஸ்ரீ சோ. இராமச்சந்திரக் குருக்கள் வழங்கிய ஆசியுரை

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

பல்லாண்டுகளாக பக்தர்களின் இனிய லட்சியக் கனவு நிகழும் ஸ்ரீமுக வருடம் கார்த்திகை மாதம் 23ம் நாள் புதவாரத்தில் விநாயகப் பெருமான் ஆலய மஹாகும்பாபிஷேகம் பெருவிழாவாக நிறைவேறுகிறது. மூர்த்தி, தீர்த்தம், தலம், பெருமையுடைய முகத்துவாரம் பதியில் கோயில் கொண்டவரும் அன்பர்கள் இதயதாமரையில் வீற்றிருப்பவருமாகிய விநாயகப் பெருமான் அனைவருக்கும் இஷ்ட சித்திகளை அருள்புரிவாராக. பல ஆண்டுகளாக இந்த ஆலய பிரதம குருவாக பணிபுரியும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது நான் பெற்ற பெரும் பேறு. மேற்படி விழாவில் மலரும் கும்பாபிஷேக மலர் கலை மணமும், அருள் மணமும் உடையதாகிச் சிறப்புடன் அமைய விநாயகப் பெருமானைத் திரிகரண சுத்தியுடன் வணங்கி ஆசி கூறுகிறேன்.

சுபம்! சுபம்! சுபம்!

சோ. இராமச்சந்திரக் குருக்கள்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

உ

ஓம் கணபதி துணை

## ஸ்ரீ ராமகான சபா தலைவரின் ஆசிச் செய்தி

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

நில வளமும் நீர் வளமும் ஒன்றிணைந்து மெருகூட்டும் இயற்கை எழில் மிகுந்த ஈழவள நாட்டின் மணிமகுடமென விளங்கும் கொழும்பு மாநகரின் கண் வாழ்வோரையும், வாழ்வு தேடி வருவோரையும் வளம்பல பெருக்கி வாழ்வித்து இறையுணர்வூட்டி இன்னல்கள் அகற்றி ஜாதிமதம் இல்லாது சகலரை தன்னகத்தே கொண்டு விளங்கும் முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் கும்பாபிஷேகம் இன்று நடைபெறும் நன்நாளில் ஒருவிக்கினமும் வராது நடைபெற எல்லாம் வல்ல விநாயகரை பிரார்த்திக்கின்றேன்.

பிரமஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா
தலைவர்
ஸ்ரீ ராமகான சபா

உ
சிவமயம்

# ஆசியுரை

அகஜானன பத்மார்க்கம்
கஜானன மகர்நிசம்
அநேகதந்தம் பக்தானாம்
ஏகதந்தம் உபாஸ்மகே

பிரணவப் பொருளாய் விளங்கும் பரம்பொருளாகிய சிவபிரானின் தோற்றமாய் விளங்குவதால் தாமும் பிரணவப் பொருளாய் விளங்கும் விநாயகக் கடவுள் தம்மை வழிபடும் அடியவர்க்கு இடர்களை நீக்கி அருள் செய்யுமுகமாகவும் கல்வி, வளம் முதலிய இஷ்டசித்திகளைக் கொடுக்கும் முகமாகவும் கொழும்பு முகத்துவாரப் பகுதியில் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் என்னும் திருநாமத்துடன் வீற்றிருந்தருளும் இப்பெருமானுக்கு ஸ்ரீமுக வருஷம் கார்த்திகைத் திங்கள் அஸ்த நட்சத்திரத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். இந்நன்னாளில் இக் கைங்கரியத்தைச் செய்து முடிக்க உதவிய நிர்வாகத்தினர் திரு. செல்லமுத்து சங்கரப்பிள்ளை குடும்பத்தினர், திரு. சின்னத்தம்பி அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாக சபையினர், பல்வேறு உதவிகள் புரிந்த குருமார்கள், சிற்பாசாரியர்கள், தொண்டர்கள், மற்றும் விநாயகர் பக்தர்கள் ஆகியோருக்கு ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமான் திருவருளால் ஆயுள், ஆரோக்கியம், ஐஸ்வரியம் பெற்று நீடு வாழ வேண்டுமென வாழ்த்தி எனது நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈசானசிவ. சி. குஞ்சிதபாதக் குருக்கள்
பிரதிஷ்டா குரு

# சுப்பிரமணியர்

பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறும் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமான் என்னும் பேராளா

சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச் செந்தூர்த்
தேவா தேவர் சிறை மீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்

பாராமகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பா வா வாவென்றுனைப் போற்றிப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்

வாராதிருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

(பகழிக் கூத்தர் – திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்)




UNITED

# P. P. DEVARAJ. M. P.

## Minister of State for Hindu Religious and Cultural Affairs

### வாழ்த்துச் செய்தி

முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேகத்தை ஒட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துக்களை அளிப்பதில் மிக்க நிறைவடைகின்றேன்.

தலைநகரான கொழும்பில் அமைந்துள்ள சிவாலயங்களுள் ஒன்றான சித்தி விநாயகர் ஆலயம் சந்திரசேகர முதலியார் அவர்களால் கட்டப்பட்டதாகும்.

அண்மைக்காலமாக இலங்கையின் பல பாகங்களிலும் ஆலயங்கள் சீர் பெற்றுத் துலங்குகின்றன. குடமுழுக்கு விழாக்கள் நடைபெறுகின்றன. இவை மக்கள் ஆன்மீகத்தின்பால் கொண்டுள்ள ஈடுபாட்டையே குறித்துக் காட்டுகின்றது.

ஆலயங்கள் பொலிவுடனும், ஆன்மீகத் தன்மையுடனும் திகழும் போதுதான் மக்கள் சமுதாயம் மேன்மையுறும். தெய்வீக உணர்வும், நற்பண்புகளும் சிறக்கும்.

அந்த வகையில் பழமையும் சிறப்பும் மிக்க சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை சிறப்புற நடத்த முன்வந்துள்ள ஆலய பரிபாலன சபையினரை மனமாரப் பாராட்டுகின்றேன்.

இவ்வாலயத்தினின்றும் எழும் தெய்வீக அருள் அனைத்து மக்களுக்கும் நிறைவை அளிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பி. பி. தேவராஜ்
இந்துசமய, கலாசார அலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்.

உ
கணபதி துணை

# கைத்தொழில் இராஜாங்க அமைச்சரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான மாண்புமிகு எம். எஸ். செல்லசாமி அவர்கள் விடுத்துள்ள ஆசிச் செய்தி

கொழும்பு, முகத்துவாரத்தில் திகழும் அருள்மிகு ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகராலயம் பிரசித்தி வாய்ந்தது. அப்பகுதி வாழ்மக்கள் இனவர்க்க பேதமின்றி சென்று தரிசிக்கும் மகத்துவமுடையது. இத்தகைய கோயிலில் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறதும் இறைவன் மேலே இருக்கின்றான் எல்லாம் இனிதே நிறைவுபெறும் என்பதும் இந்து மக்களது வாழ்க்கையின் ஆதார சுருதி. குறிப்பாக இன்னல்கள் ஏற்பட்டு இடரிலும் தளரிலும் தெய்வநம்பிக்கையுடையோர், விரக்தியடையார்.

இன்றைய காலகட்டத்தில் மக்கள் மனதிற்கு தைரியமூட்டும் வகையில் இக் கும்பாபிஷேக விழா அமைகிறது. அது சிறப்புற நிறைவேற இறைவனது ஆசியை வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பேருவை கொள்கிறேன்.

எம். எஸ். செல்லசாமி
கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

රත්නසිරි රාජපක්ෂ
සාමදාන විනිශ්චයකාර, නිල නොලත් මහෙස්ත්‍රාත්
කොළඹ නගරාධිපති

ரத்னசிறி ராஜபக்ஷ
சமாதான நீதவான் உத்தியோகப்பற்றற்ற நீதவான்
கொழும்பு மாநகர முதல்வர்

RATNASIRI RAJAPAKSE
**Justice of the Peace-Un official Magistrate**
**Mayor of Colombo**

---

**MESSAGE FROM HIS WORSHIP RATNASIRI RAJAPAKSE**
**MAYOR OF COLOMBO**

I am happy to send a message on the occasion of celebrat-ing the Mahakumbabishekam Pooja at the Sri Sarwartha Sidhi Vinayakar Devasthanam alias Kalli Kovil at Mutwal on December 8, 1993 from morning.

This celebration is being organised after the completion of the renovations of the temple. It is considered to be of great national importance. Those who come to the temple are from various communities irrespective of their own religion. People in distress come to this temple seeking a solace with the blessings of Kalli Amman (Kalli Mani) particularly on Tuesdays and Fridays.

I extend my sincere wishes to be a successful celebration while thanking the Senior Trustee of the temple and others of the Organizing Committee.

**December 8, 1993.**

**RATNASIRI RAJAPAKSE,**
**MAYOR OF COLOMBO.**

කේ. ගනේෂලිංගම් ජ.වි., න.ම.
කොළඹ නියෝජ්‍ය නගරාධිපති
க. கணேசலிங்கம்
ஜே.பி., யூ.எம்.
கொழும்பு பிரதி மாநகர முதல்வர்
K. GANESHALINGAM J.P., U.M.
DEPUTY MAYOR OF COLOMBO

නගර ශාලාව, කොළඹ 7.
நகர மண்டபம்.
கொழும்பு 7.
TOWN HALL, COLOMBO 7.

දුරකථනය/தொலைபேசி/Telephone
කාර්යාලය / அலுவலகம் / Office: 692736, 691673, 691191-202
නිවස / இல்லம் / Residenoe: 574383

<u>கொழும்பு மாநகராட்சி மன்றம்</u>

<u>பிரதி முதல்வர்</u>

<u>கே. கணேசலிங்கம் அவர்களது வாழ்த்துச் செய்தி</u>

முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும், மகா காளி அம்பாளுக்கும் 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 ஆந் திகதி, புதன்கிழமை மகா கும்பாபிஷேகம் நிகழ்வது சைவ மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைகிறது.

1955 ஆம் ஆண்டு முதலாக ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தானம் பரிபாலன சபையின் நிருவாகத்தில் சிறப்புற்றோங்கி வருவதை நான் நன்கு அறிவேன்.

கொழும்பு வாழ் சைவ மக்களது வழிபாட்டுத் தலமாக சந்திர- சேகர முதலியார் தாபித்த பெருமையுடன் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானுடைய தேவஸ்தானம் முகத்துவாரத்தைப் பக்தர்கள் கூடும் தலமாக மாற்றியமைத்து விட்டது.

ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானது புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் சர்வ மங்களகரமாக நிறைவுபெறக் கருணை பாலித்தருளுவதுடன், எமது நாட்டின் இன ஒற்றுமையை வளர்ப்பதற்கும், அமைதி நிலவச் செய்வதற்கும் ஒளிமயமான எதிர்கால நல்வாழ்வை வழிபடும் மக்கள் அனைவருக்கும் ஏற்படுத்துவதற்கும் அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

கும்பாபிஷேக மலர் அருள் மணம் பரப்பும் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானது கருணையை அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் எனப் பிரார்த்தித்து எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கே. கணேசலிங்கம்,
பிரதி முதல்வர்,
கொழும்பு.

உ
கணபதி துணை

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"
நன்றே செய்யினும் இன்றே செய்க.

# வடகொழும்பு இந்து பரிபாலன சங்கத் தலைவர் விடுத்துள்ள ஆசிச் செய்தி

கொழும்பு முகத்துவாரத்தில் திகழும் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயம் பழம் பெரும் தொன்மை வாய்ந்தது. "வேண்டியவர்க்கு வேண்டியாங்கு ஈந்தருளும் விக்கினேஸ்வரப் பெருமானை அப்பகுதி வாழ் மக்கள் இனமத பேதமின்றி வணங்கி வரும், பூத கணங்களுக்கெல்லாம் தலைவனான கணபதியின் கும்பாபிஷேக நிகழ்ச்சியை இட்டு கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் சார்பில் நிறைவடைகின்றேன்.

கும்பாபிஷேகம் செய்வது என்பது முடிந்த காரியம் அல்ல. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கிணங்க இப்பெருங் கைங்கரியத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் இறையருள் கிடைக்கப் பிரார்த்தித்தும் இன்றைய காலகட்டத்தில் நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம் நிலவ வேண்டியும், சர்வார்த்த சித்தி விநாயகர் கருணையால் யாவையும் இனிதே சிறப்புற வேண்டியும், எனது அன்புக்கும் வணக்கத்துக்கு முரிய பேருவகையையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

எஸ். பி. சாமி,
தலைவர்,
வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம்.



# அம்பிகை

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறை பழுத்த
துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்து

எடுக்கும் தொழும்பர் உளக் கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே ஏறிதரங்கம்

உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்திலழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே மதுகரம்வாய்

மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

(குமரகுருபரர் - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்)



UNITED

உ

ஓம் கணபதி துணை

# முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் பஞ்சகம்

1. தண்டையஞ் சதங்கைத் தாமரைத் தாளை
சந்ததம் ஆர்கலி வேந்தன்
தெண்டிரைக் கரத்தால் விளக்கியர்ச் சனைசெய்
சீர்முகத் துவாரத்துக் கோயில்
கொண்டெழுந் தருளும் சர்வார்த்த சித்திக்
கோவினை நாவுற வாழ்த்தி
எண்டகு சிந்தையுடன் பணிந் தேத்த
இன்மையாம் நோய்பிணி இகலே.

2. வலம்புரி முழக்கும் சிவனடியார்தம்
வாழ்த் தொலி முழக்கும்வார் கடலின்
சலம்புரிமுழக்கை விஞ்சிடும் முகத்து
வாரத்து வாழ்ந்திடும் இமயக்
குலக்கொடி பயந்த குடிலையின் வடிவாய்க்
குலவுறு விநாயகப் பிரானின்
சலசமென் பதங்கள் தலையினிற் சூடிச்
சஞ்சலந் தவிர்த்திடு வோமே.

3. செல்லுறு முகிலை யுரசிமா மழைவீழ்த்
திடுமுயர் முகத்துவாரத்துத்
தொல்பதி யதனில் சர்வார்த்த சித்திச்
சுருதிமா முதலடி யார்கள்
அல்லல்க ளகற்றி அருள்செயற் கிருந்தார்
அந்தியும் சந்தியும் அவர்தம்
அல்லிமென் பாத விணை யருச்சித்து
அடைகுவம் விழைந்திடு வரமே.

4. அளியினமுரலு மொலி பிரணவத்தின்
அலையிடு மோசை போற் குலவும்
குளிர்பசுங் காச்சூழ் முகத்துவாரத்தில்
கோயில் கொண்டருளி வீற்றிருக்கும்
களிமதம் பொழியும் கயானனக் கடவுள்
கடிமலரடி சிரம்படிய
வழிபடுமடியார் விதிபொறி எழுத்தை
மாற்றிட வல்லவர் தாமே.

5. மலரடிச் சிலம்புகலின் கலின் ஆர்ப்ப
மங்கையர் அடிநிதம்விளக்கி
வலம்வருவீதி வெயில்தவிர் நிழலார்
வனப்புற முகத்துவாரத்துத்
தலந்தனில் திகழும் ஒருதனிக் கோட்டுத்
தற்பரன் தாள் தொழுமடியார்
நிலவுலகதனிற் கருவினிற் புகுதா
நிலையினை எய்துவர்தாமே.

பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம்

# கும்பாபிஷேகம் காண்போம் வாரீர்!

*பிரம்மஸ்ரீ சோ. குஹானந்த சர்மா*

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்பது முதுமொழி. "கோயில் இல்லாவூரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது இன்னுமொரு பழமொழி. எனவே ஆலயம் எமது வாழ்வில் இன்றியமையாததொன்று என்பது வெளிப்படை. உண்மையில் ஆலயங்களே எம்மை நெறிப்படுத்திச் செம்மையான வாழ்விற்கு இட்டுச் செல்கின்றன எனலாம். ஆலயங்களிலே நாம் கோபுர தர்சனம், மூர்த்தி தர்சனம் என்பன செய்து மன நிறைவு கொள்ளுகின்றோம். ஆலயங்களிலே அவ்வப்போது நடைபெறும் கும்பாபிஷேகங்களிலே நாம் பங்கு கொண்டு அதனைக் கண்ணாரக் கண்டு இன்புறுகின்றோம். கொழும்பு, முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் கோயில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் 1993.12.08 ஆந் திகதி நடைபெறுகின்றது. இந்த வேளையில் கும்பாபிஷேகம் தொடர்பான விளக்கத்தை ஈண்டு ஆராய்வோம்.

**கும்பாபிஷேகம் என்றால் என்ன?**

இது ஆவர்த்தம், அனாவர்த்தம், அந்தரீதம், புனராவர்த்தம் என நான்கு வகைப்படும். புதிய மூர்த்தியை பாலப் பிரதிஷ்டை செய்து அதனைப் புதிய கோயிலின் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து அம்மூர்த்திக்கு அபிஷேகம் செய்வது ஆவர்த்தம் எனப்படும்.

பழைய ஓர் ஆலயம் கட்டிட இடிபாடுகளுடன் பூஜையற்று இருப்பின் அவ்வாலயத்தைத் திருத்தியபின் அபிஷேகம் நடைபெறுவது அனாவர்த்தம் ஆகும்.

கோவிலின் விமானம், கோபுரம், கர்ப்பக்கிரகம் என்பனவற்றின் விக்கிரகங்களிற் பழுது இருந்தால் அவைகளை பழுதுபார்க்குமுன் மூர்த்திகளைப் பால (சிறு) ஆலயம் அமைத்து அதிலே பாலஸ்தாபனஞ் செய்த பின், ஆலயத்தில் உள்ள திருத்தங்களைச் செய்து வர்ணந் தீட்டியபின் மீண்டும் மூர்த்திகளை அந்தந்த ஆலயங்களிற் பிரதிஷ்டை செய்தபின் கும்பாபிஷேகஞ் செய்வது புனராவர்த்தம் என்று கூறப்படும்.

சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக மூர்த்திகளில் ஏற்படும் சிறு பழுதுகளை உடனே திருத்தி அபிஷேகஞ் செய்வது அந்தரீதம் எனச் சொல்லப்படும்.
யாகசாலையில் கும்பத்திலே மூர்த்தியை ஆவாகனஞ் செய்து அதற்குப் பாவனாபிஷேகம், பூஜை என்பன செய்து ஹோம குண்டங்களில் அக்னியிலே மூர்த்திகளை எழுந்தருளச் செய்து அக்னியில் உள்ள மூர்த்திகளுக்கு ஆகுதிகள் செய்து விசேஷ திரவ்விய ஹோமத்திலே மூலிகை வகைகள், பலகாரங்கள், அமுதுகள், பழவகைகள், பால், தயிர், இளநீர், புனுகு, ஜவ்வாது போன்ற வாசனைத் திரவியங்கள் என்பன அளித்து முதலில் ஹோம குண்ட அக்கினியில் உள்ள மூர்த்திகளை ஹோமஞ் செய்த வரிசைப்படி அந்தந்த மூர்த்திகளிடத்திற் சென்று அந்தந்த ஸ்தானங்களில் சமர்ப்பித்து ஹோமகுண்ட மூர்த்திக்குப் பூர்ணாகுதி கொடுத்துப் பின்பு ஹோமகுண்ட மூர்த்தியை பிரதான குண்டத்தில் மந்திரபூர்வமாக எழுந்தருளச் செய்து கும்பத்தில் உள்ள மூர்த்திக்கு விசேஷ பூஜை செய்து வீதிவலம் வந்து கும்பத்தில் உள்ள மூர்த்தியை மந்திர பூர்வமாக விக்கிரக மூர்த்தியில் எழுந்தருளச் செய்தபின் கும்பப் புனிதநீரை விக்கிரகத்திற்கு அபிஷேகஞ் செய்வதே கும்பாபிஷேகம் எனப்படும்.

**கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் என்றால் என்ன?**

அனுக்ஞை எனப்படும் கிரியையுடன் கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகின்றன. பிரதம சிவாச்சார்யர் ஆலய மூர்த்தியின் அருளை வேண்டிச் சர்வ போதகர், சாதாகாசாரியர், குருமார் முதலியோரிடத்தில் மஹோன்னத கும்பாபிஷேகத்தைச் செய்ய உத்தரவு வேண்டுவதே இக்கிரியையாம்.

இதனைத் தொடர்ந்து தனபூஜை நடைபெற்று அதிலே பூஜிக்கப்பட்ட திரவியங்களை யாகம் கட்ட 2 பாகமும், அபிஷேக திரவ்வியத்திற்கு 1 பாகமும், சிவாச்சார்ய தக்ஷணையாக 2 பாகமும், மூர்த்திக்கு 1 பாகமும், வேதம், திருமுறை என்பனவற்றிற்கு 1 பாகமும், தானங்களுக்கு 1 பாகமும், பிராமண போஜனம், மஹேஸ்வர பூஜை முதலானவற்றிற்கு 1 பாகமும், சிற்பி முதலானோர்க்கு 1 பாகமும், யாக திரவ்வியங்களுக்கு 1 பாகமுமாக 11 பாகமாகப் பிரித்து வைக்கப்படும்.

குரு வணக்கம் செய்த பின் விக்கினங்களைப் போக்கும் விநாயகரை வேண்டி விசேஷ வழிபாடுகள் இடம்பெறும். பின் கிராமத்தில் அசுர, ராக்ஷசர் முதலானவர்களைத் திருப்தி செய்ய கிராம சாந்தி நடைபெறும்.

இதனையடுத்து பிரவேச பலியானது கும்பாபிஷேகஞ் செய்யப்படுகின்ற இடத்தில் உள்ள பைரவர், காளி, இயக்கர், ராக்ஷசர் முதலானோர்களைத் திருப்திப்படுத்தல் நடைபெறும். பின்பு பாசுபதாஸ்தம் அஹோராஸ்த்திரம், பிரத்தியங்கிராஸ்திரம், சிவாஸ்த்திரம் முதலான நால்வரையும் நான்கு திக்குகளையும் காவல் செய்யும்படி வழிபாடு இடம்பெறும். இவைகளைத் தொடர்ந்து சிவனை நடுநாயகராகக் கொண்டு அஷ்ட பைரவர், அசிதாங்க பைரவர், சண்டபைரவர் முதலானவர்களைப் பூஜித்து அசுர, ராக்ஷசர்களின் தொல்லைகள் நீங்கக் காவல் செய்யும்படி வேண்டுவது இரட்சோக்கிரஹோமம் ஆகும். இயற்கை வளம் பெறவும், நாட்டு மக்கள் நலமே வாழவும் நவக்கிரக வழிபாடு நடைபெறும். பின்னர் பூமியைச் சுத்தஞ் செய்வதற்கான வழிபாடு வாஸ்த்து சாந்தியாகும். நீற்றுப் பூசனிக்காய் வெட்டி ஹோமம் செய்வதும் ஆள் உருவமான வைக்கோலைக் கட்டி ஹோம அக்கினியில் அதனைப் பற்ற வைத்தும் முழுஇடத்திற்கும் அதனை இழுத்துச் செல்வதும் இக்கிரிகையிலேயே யாம். இவைகளைத் தொடர்ந்து சகல தேவர்களும் வாசஞ் செய்கின்ற பசுவை, கும்பாபிஷேகம் நடைபெறும் இடத்திற் கட்டிக் கோபூஜை இடம்பெறும்.

இவைகளையடுத்து மிருத்சங்கிரணக் கிரியை மூலம் புனித மண்ணை எடுத்து அங்குரார்ப்பணம் என்னும் கிரியை மூலம் சந்திரனை வணங்கி பாலில் நவதானியங்களை இட்டுப் புனித மண்ணில் முளைக்கப்போடும் கிரியை நடைபெறும்.

**கும்பாபிஷேகக் கிரியைகள் என்றால் என்ன?**

பிரதான குரு முதல் ஏனைய குருமார்வரை கும்பாபிஷேகத்தைப் பக்தி பூர்வமாகச் செய்கின்றோம் எனச் சங்கற்பித்து வலது கையில் காப்புக் கட்டுவதுடன் கும்பாபிஷேகக் கிரியை ஆரம்பமாகின்றது.

இதே வேளையில் யாகசாலையில் கும்பங்களை வைப்பதற்கான தானியங்கள் பரப்பப்படும். ஞானக்கினிக்கான நெருப்பு சூரிய காந்தத்தில் இருந்து தயாரிக்கப்படும்.

அடுத்து குடஸ்தாபனம் நடைபெறும். குடத்தின் நுனிப்பாகத்தில் சிவதத்துவ ருத்திரனையும், நடுவில் வித்தியா தத்துவ விஷ்ணுவையும், அடியில் ஆன்ம தத்துவ பிரம்மாவையும் பூஜித்து, சப்த தாதுக்களும், ஜீவனும் உண்டாகச் சுத்தீகரிக்கப்பட்ட குடத்திற்குள் பூஜை செய்யப்படும். நவசக்திகளையும் குடத்திற் சுற்றப்பட்டுள்ள நூல்கள் மூவினை கொண்டவை. மூவிளையிலே சரஸ்வதி, லக்ஷ்மி, ரௌத்திரியையும் தீர்த்தத்திற் கங்கையையும், மதிய பாகத்தில் வருண பகவானையும் வாமை ஜ்யேஷ்டை முதலான சக்திகளை நவரத்தினங்களிலும், தங்கத் தாமரைப் பூவில் சதாசிவரையும், சப்த மாதர்களை வாசனைத் திரவியங்களிலும் பூஜை செய்து குடத்தில்

இட்டு மங்கள வாத்தியம் முழங்கக் குடத்தில் வைக்கப்படும் மாவிலையை ஜடையாக அலங்கரிப்பர். தேங்காயைச் சிரசாகவும், கூர்ச்சத்தை முடியாகவும் பட்டு வஸ்திரத்தைத் தோலாகவும் பூணூலை பஞ்சப்பிரம்மமுகமாகவும் அலங்கரித்துப் பூஜை செய்யும்போது அந்தக் கும்பமானது சர்வ தேவர்களும் உள்ள பூரண கும்பமாகின்றது. பரம்பொருளான மூர்த்தியாகிய பரமேஸ்வரனைத் தியானித்து கலை, தத்துவம், புவனம், வர்ணம், மந்திரம் முதலானவை சடத்துவ நியாசஞ் செய்வதால் எல்லாச் சத்தித்துவத்தைப் பெற கலாகர்ஷணம் எனும் கிரியை கும்பத்துக்குச் செய்யப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து மங்கள வாத்திய சகிதம் கும்பம் வீதிவலம் வந்து யாக சாலையில் வைக்கப்படுகின்றது.

### யாகசாலைக் கிரியை எவ்வாறு நடைபெறும்?

மாவிலை, தோரணம், மாலை, கமுகு, கரும்பு முதலியவற்றால் நன்கு அலங்கரிக்கப்பட்ட யாகசாலை நடுநாயகமாக இப்போது விளங்கும். இந்திரன் முதல் விஷ்ணுவரை 10 திசைகளிலும் காப்பாளர் விளங்குவர். நிவிர்த்தி முதலான நான்கு கலைகளும் 4 பக்கமும் விளங்க, நந்தி முதலான எண்மர் (8) வாயில் காப்போராகவும், அக்கினியின் வடக்கிலே சிவசூரியனும், நிருத்திக்குக் கிழக்கில் யாக பலனைத் தந்தருளும் வாஸ்த்து புருஷனும், வாயுவுக்குத் தெற்கில் மஹா லக்ஷ்மியும், வாயுவின் வலது புறத்தே யாக விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமானும், ஈசானத்து மேற்குப் புறத்தில் சதாசிவம் முதல் சப்தகுரு மூர்த்திகளையும் கும்பங்களிலே ஆவாகித்து நவகுண்டங்களோடு அலங்காரமான மேடையில் மூர்த்திக்கான கும்பங்கள் பூஜைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

இவைகளுக்குக் காலையும் மாலையும் பாவனாபிஷேகம், நியாசம், பூஜை, ஹோமம் என்பன நடைபெற்று வேதம், ஆசீர்வாதம், ஸ்தோத்திரம், திருமுறை என்பன இடம்பெறும்.

நவ குண்டத்தைப் பார்த்தால் குளிர்மை பொருந்திய பிறைவடிவான குண்டம் தெற்கில் இருக்கும். நெருப்பு வடிவான முக்கோண குண்டம் தெற்மேற்கு மூலையில் காணப்படும். வாயுவடிவான ஆறுகோண குண்டம் வடமேற்கு மூலையில் அமைந்திருக்கும். ஆகாயம் வட்டவடிவானது, இது மேற்குத் திக்கில் உள்ள குண்டமாகும். தாமரை வடிவிலான சூரியன் வடக்குத்திக்குக் குண்டமாம். சந்திரன் எண்கோண வடிவ குண்டமாக வடகிழக்கு மூலையில் இருப்பார். ஆன்மாவுக்கான குண்டம் அரசிலை வடிவினதாய் தென்கிழக்கில் அமைந்திருக்கும் ஈசானத்தின் வலதுபுறத்தே பிரதான குண்டம் இருக்கும்.

யாகசாலையில் உள்ள குண்டங்களுக்கும் முறைப்படி பூஜை, ஹோமம், திரவ்விய ஹோமம் என்பன நடைபெறும்.

### கிரியாபூர்வமான கோயில் அமைப்பு எவ்வாறு நடைபெறுகின்றது?

ஸ்தூபி ஸ்தாபனம், தீபஸ்தாபனம் முதலானவற்றைத் தொடர்ந்து மூர்த்தி வைக்கப்படும் பீடத்தில் நவரத்தினம், பூஜிக்கப்பட்ட இயந்திரம் என்பன வைக்கப்பட்டபின் பிம்ப (மூர்த்தி) ஸ்தாபனம் நடைபெறும். பீடத்தையும், மூர்த்தியையும் பிணைக்க அஷ்டபந்தனம் சாத்தப்படும். இவைகளைத் தொடர்ந்து சகலரும் எம்பெருமானைத் தீண்டி அணைத்து எண்ணெய் சாத்தும் வைபவம் நடைபெறும். இதன் பின்பு மூர்த்தி, கோயில் என்பன சுத்தஞ் செய்யப்படும்.

அடுத்து மூலஸ்தான வானம் ஸ்தூபி வைக்கப்படுவதால் அடைக்கப்பட்டுள்ளது. நவரத்தினம், யந்திரம் வைக்கப்படுவதால் பூமிப் பாகம் அடைக்கப்பட்டுள்ளது. ஆகவே, பிம்பஸ்தாபன மூர்த்தியே ஏக நாயகனாக விளங்குகின்றார். இவருக்குக் காப்புக் கட்டிக் கிரியா பூர்வமாக மந்திரங்களைச் சொல்லித் தர்ப்பை நுனியால் அந்தந்த இடங்களைத் தொடுவதன் மூலம் மூர்த்தி (பிம்பம்) உருவ அமைப்பை அடைகின்றது. அடுத்து விசேஷ திரவ்விய ஹோமம் நடைபெறும். தொடர்ந்து யாகசாலையில் இருந்து மூலமூர்த்தி வரை கட்டப்பட்டுள்ள தர்ப்பைக் கயிற்றின்

அனுசரணையுடன் ஹோமஞ் செய்த முறைப்படி அந்தந்த இடங்களில் மூர்த்தியின் மேல் நெய்யைச் சொரிவதால் மூர்த்திகரம் ஊட்டப்படுகின்றது.

இவைகளைத் தொடர்ந்து சகல குண்டங்களையும் பிரதான சிவாச்சார்யர் மூலம் ஒப்படைத்துப் பூரணாகுதி கொடுக்கப்படும். அடுத்துப் பிரதான குண்டத்தில் உள்ள சகல மூர்த்திகளும் மந்திர பூர்வமாகப் பிரதான சிவாச்சார்யரினால் பிரதான கும்பத்தில் சேர்ப்பிக்கப்படும். இவ்வேளையில் பிரதான கும்பம் சகல கலைகளையும் கொண்ட மூர்த்தியாக விளங்கும்.

**கும்பாபிஷேகம் எவ்வாறு நிகழ்கின்றது?**

ஆலயத்திலே மூர்த்திகள் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டன. யாகசாலையில் பூரண கும்பத்தில் மூர்த்தி பூரணத்துவம் கொண்டவராக விளங்குகின்றார். அவருக்குச் சகல உபசார பூஜைகள் செய்து வேதம், ஆசீர்வாதம், திருமுறை என்பன சொல்லி ஆராதித்து வணங்கும் கிரியை அடுத்து நிகழும். சுபயோக சுபமுகூர்த்தத்தில் ஸ்தூபி அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சர்வ வாத்தியங்களும் முழங்க வேத, திருமுறை கோஷத்தின் மத்தியிலே நடுநாயகமாகப் பூரண கும்பம் எடுத்து வரப்படும். வீதி வலம் வந்ததும் மூலமூர்த்தியின் முன்பாக வைக்கப்பட்டு அந்தந்த அவையவங்களுக்கான சடத்துவ நியாசம் சொல்லிப் பிரதமகுரு கும்ப மூர்த்தியைப் பிம்ப (விக்கிரக) மூர்த்தியில் ஆவாகிப்பார். அதன்பின் கூர்ச்சம், மாலை என்பன பிம்பத்துக்குச் சாத்தி வழிபாடு செய்யப்படும்.

சுபமங்கள வேளையில் கும்பப் புனித நீரினைப் பிரதம சிவாச்சார்யர் விக்கிரகத்தில் அபிஷேகம் செய்யும் போது அந்த விக்கிரகமானது சகல கலைகளையுங் கொண்ட மூர்த்தியாக விளங்குகின்றது. கும்பாபிஷேகம் முடிந்தவுடன் கோயில் கதவு சாத்தப்படுகின்றது. கும்பாபிஷேகஞ் செய்யப்பட்ட மூர்த்தியைத் தேவர்கள் தரிசிப்பதற்காகவே இது செய்யப்படுகின்றது. இவைகளைத் தொடர்ந்து பசு, சிவாச்சார்யர், வேதபாரகர், கண்ணாடி, பூரண கும்பம், தீபம், கன்னிப்பெண், சன்னியாசி, சுமங்கலி, எஜமான், பக்தர் கூட்டம் முதலான தசதர்சனம் நடைபெறும். குருவின் ஆசியும் குரு வழிபாடும் நடைபெற்ற பின் எஜமான் அபிஷேகம் நடைபெற்றுக் கும்பாபிஷேகப் பலன் சகலருக்கும் தீர்த்தமூலம் கொடுப்படும். கும்பாபிஷேகம் முடிவடைந்த பின் மஹா அபிஷேகம் நிகழும். இதுவே கும்பாபிஷேகஞ் செய்த மூர்த்திக்கு நாம் வழமையாகச் செய்யப்போகும் பூஜைக்கு முதற்படியாகும். சுவாமிக்கு எண்ணெய் சாத்தி விசேஷ திரவ்ய அபிஷேகம் நடைபெற்று ஸ்னபன கும்ப அபிஷேகஞ் செய்யப்படும். சுவாமியை ஆசை தீர நன்கு அலங்கரித்து நைவேத்தியம், பழவகை, தாம்பூலம் என்பன அர்ப்பணித்து தீபாராதனை, அர்ச்சனை, பஞ்சாராத்தி வேதம், ஆசீர்வாதம், பஞ்சபுராணம் என்பன சொல்லி அன்புடன் ஆராதனை செய்வதும் சிறப்பான வழிபாடாகும்.

"நாம் இந்தச் சரீரத்தைப் பெற்றது
கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறுவதற்கேயாம்"

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

ஆம்! இதுகாறும் கும்பாபிஷேகம் முதல் மஹாபிஷேகம் வரையிலான கிரியா விளக்கங்களைக் கண்ணுற்றோம். நாவலர் பெருமானின் அறிவுரைக்கமைய இன்று நாம் கண்டு இன்புறும் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகத்தைக் கண்டு விக்னேஸ்வரப் பெருமானை வழிபட்டு சகல சௌபாக்கியங்களையும் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக!

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து!**

*******

# கிரியா கால விபரங்கள்

| | |
|---|---|
| ***கார்த்திகை 16ம் திகதி*** (1-12-93) | புதன்கிழமை காலை 7-24 மணி முதல் கர்மாரம்பம் விநாயக வழிபாடு, அநுக்ஞை, திரவ்யசுத்தி, தனபூஜை, கணபதி ஹோமம், ஸ்ரீ காளி அம்பாள் அபிஷேகம் வழிபாடு. |
| ***கார்த்திகை 17ம் திகதி*** (2-12-93) | வியாழக்கிழமை மாலை 5 மணி முதல் கிராமசாந்தி, பிரவேசபலி, சேஷாக்ன ஹோமம், திசாஹோமம், சாந்தி ஹோமம். |
| ***கார்த்திகை 18ம் திகதி*** (3-12-93) | வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் நவக்கிரக ஹோமம், வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரஹணம், சூர்யாக்கினி கிரஹணம், நூதனமூர்த்திக்குப் பூர்வாங்கக் கிரியைகள்.<br>மாலை 4 மணிமுதல் அங்குரார்ப்பணம், ஆசார்யவரணம், ரக்ஷாபந்தனம், பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை, கடஸ்தாபன கலாகர்ஷணம், யாத்திரா ஹோமம், பிரதான கும்பம்யாக்சாலாப் பிரவேசம், யாகபூஜை, அக்கினிகார்யம் பூஜை, வேத தோத்திர தேவாரபாராயணம். |
| ***கார்த்திகை 19ம் திகதி*** (4-12-93) | சனிக்கிழமை அதிகாலை 5 மணி முதல் 6 மணிவரை ஸ்தூபி, தீப, யந்திர, பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், சாத்தல் காலை 8 மணி முதல் விசேஷ சந்தி பூதசுத்தி, யாக பூஜை, ஹோமம், பூஜை, பஞ்சமுகார்ச்சனை, வேதம் தோத்திர தேவார பாராயணம்.<br>மாலை 5 மணி முதல் வேதபாராயணம், விசேஷ சந்தி, யாக பூஜை, ஹோமம், பூஜை பஞ்சமுகார்ச்சனை, வேத தோத்திர தேவார பாராயணம். |
| ***கார்த்திகை 20ம் திகதி*** (5-12-93) | ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 9 மணிக்குள் சிற்பிதூபி அபிஷேகம், விசேஷ சந்தி, பூதசுத்தி, யாக பூஜை, பஞ்சமுகர்ச்சனை வேதம், தோத்திர தேவார பாராயணமும்,<br>மாலை 5 மணி முதல் வேதபாராயணம் விசேஷ சந்தி யாக பூஜை ஹோமம், பூஜை, பஞ்சமுகார்ச்சனை, வேத தோத்திர தேவார பாராயணம். |
| ***கார்த்திகை 21ம் திகதி*** (6-12-93) | திங்கட்கிழமை காலை 7 மணி முதல் தைலாப்பியங்கம் பக்தர்கள் சுவாமிகட்கு எண்ணெய் சாத்துதல்.<br>8 மணி முதல் விசேஷ சந்தி பூதசுத்தி, யாக பூஜை பஞ்சமுகர்ச்சனை, வேத தோத்திர தேவாரபாராயணம்.<br>மாலை 5 மணி முதல் வேதபாராயணம், விசேஷ சந்தி யாகபூஜை ஹோமம், பூஜை, பஞ்சமுகர்ச்சனை வேத தோத்திர தேவாரபாராயணம். |
| ***கார்த்திகை 22ம் திகதி*** (7-12-93) | செவ்வாய்க்கிழமை கோயில் சுத்தப்படுத்தல்.<br>காலை 8 மணி முதல் விசேஷ சந்தி பூத சுத்தி, யாகபூஜை ஹோமம் பூஜை, பஞ்சமுகார்ச்சனை, வேத தோத்திர பாராயணம்.<br>மாலை 5 மணி முதல் பிம்பசுத்தியாதிக் கிரியைகள், பிரதிசாபந்தம், யாகபூஜை, விசேஷ திரவ்ய ஹோமம், பூர்வ பச்சிம சந்தானம், விசேஷ தீபாராதனை வேத தோத்திர தேவார பாராயணம். |
| ***கார்த்திகை 23ம் திகதி*** (8-12-93) | புதன்கிழமை காலை 5 மணி முதல் யாகபூஜைகள், ஹோமம், 6 மணி முதல் மஹாபூர்ண்ணாகுதி, நவாக்கினி சமயோகஜனம், யாக விசேஷ தீபாராதனை யாத்திராதானாதிகள், ஸ்தூபி, கோபிர அபிஷேகம், யாக கும்ப உத்தாபனம், வீதி பிரதஷணம்.<br>காலை மணி 7.14 முதல் 8.12 மணிவரையுள்ள தனு லக்கினத்தில் மஹா கும்பாபிஷேகம், தசதர்சனம் கர்ப்பாபரண அபிஷேகம் யஜமான் அபிஷேகம், கும்பாபிஷேக பல சமர்ப்பணம், குரு வழிபாடு மஹாபிஷேகம் தீபாராதனை விபூதிப் பிரசாதம் வழங்கல்.<br>மாலை 5 மணி முதல் தேவஸ்தானம் பட்டுகள் சாத்தல்.<br>7 மணி முதல் விசேட தீபாராதனையுடன் உள்வீதி, வெளிவீதி உற்சவமும் நடைபெறும். |

உ
கணபதி துணை

# சிவஞானவாரிதி, சைவசித்தாந்த காவலர், ஞானசிரோன்மணி கு. குருசுவாமி அவர்களது வாழ்த்துரை

முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமான், மகாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா 93.12.08 புதன்கிழமை நடைபெறத் திருவருள் கூட்டி வைத்துள்ளது.

சைவமக்கள் உருவ வழிபாட்டினை மேற்கொள்ளும் போது சர்வ விக்கினங்களையும் நீக்கியருளும் விநாயகப் பெருமானையே முதலில் வழிபட்டுப் புத்தி, சித்தி, முத்திப் பலன்களைப் பெற்றனர்.

அடியார்கள் தமது மனதில் நினைப்பவை யாவற்றையும் உடனே சித்தி பெறச் செய்யும் கருணா மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானுக்கும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியருளும் மகாகாளி அம்பாளுக்கும் எனைய பரிவார மூர்த்திகளுக்கும் பெருஞ்சாந்தியாக நிகழும் மகா கும்பாபிஷேகம் மங்களகரமாக நிறைவுபெறவும், நாட்டில் சாந்தி, சமாதானம், அமைதி, ஒற்றுமை நிலவவும், கும்பாபிஷேகத்தைக் காணவரும் அடியார் பெருமக்கள் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானதும் மகா காளி அம்பாளதும் பரிபூரண கிருபா கடாட்ஷத்தைப் பெற வேண்டும் எனவும் பிரார்த்தித்து எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விரைவில் அதியற்புதமான திருப்பணி வேலைகளை நிறைவேற்றி மகா கும்பாபிஷேகம் நிகழ்வதற்கு அர்ப்பணித்த சேவையாற்றும் தர்ம பரிபாலன சபையாருக்கும், திருப்பணி வேலை நிறைவுபெற உதவி செய்த அனைவருக்கும், மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், விநாயகப் பெருமானதும், மகா காளி அம்பாளதும் திருவருள் துணை கொண்டு மேலும் பல திருப்பணி வேலைகளை நிறைவேற்ற அருளாசி அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

கு. குருசுவாமி.

உ

சிவமயம்

# விநாயகர் வழிபாடு

விநாயகர் வழிபாடு சைவ மக்களிடையே முதன் முதலில் தோன்றிய உருவ வழிபாடாகும். மக்கள், தேவர், முனிவர் யாவராலும் வணங்குவதற்குரிய சிறப்புப் பொருந்தியவரும் தனக்கு மேலாக வேறொரு தலைவர் இல்லாதவரும் விநாயகர் என அழைக்கப்பட்டு வழிபடும் பெருமையுடையவர். ஞானமே உருவாக விளங்குபவர். "வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்" என்பது முதுமொழி. இதிலிருந்து யானை முகத்துடன் கூடிய தொந்தி பெருத்த கடவுளாகக் காட்சி கொடுத்து விக்கினங்கள் யாவற்றையும் நீக்கியருளவதனால் "விக்கின விநாயகர்" எனத் துதிக்கப்படும் சிறப்புப் பொருந்தியவர் விநாயகர் என அறிகின்றோம்.

எக்கருமம் தொடங்கினாலும் விநாயகர் வழிபாட்டுடன் தொடங்கினால், அக்கருமம் வெற்றிகரமாக நிறைவுபெறும் எனச் சைவ மக்கள் நம்பினர். அதனாலேயே "நம்பிக்கை உண்டேல் தும்பிக்கை துதி செய்யும்" என்னும் பழமொழி இன்றும் எம்மிடையே நிலவிவருகிறது.

ஆலயங்களில் எக்கருமம் தொடங்குவதற்கும் முன்பதாக "கணபதி ஹோமம்" நிகழ்த்துவதும், சைவ மக்கள் எந்தக் கருமத்தைத் தொடங்கினாலும் பிள்ளையார் பூசையுடன் விநாயகரைக் குட்டிக் கும்பிட்டுத் தொடங்குவதும், கல்வியினைத் தொடங்கும் போதும் "கணபதி துணை" என்று சொல்லித் தொடங்குவதும் எடுத்த கருமம் வெற்றியாக முடியும் என்ற நம்பிக்கையினாலேயே.

விநாயகருடைய வழிபாடு கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மகாபாரதத்தை விநாயகப் பெருமான் எழுதிக் கொடுத்தார் என்னும் பழைய கதையை ஆதாரமாக வைத்து, மகாபாரத காலம் கி. மு. 3101 எனக் கணக்கிட்டு, மகாபாரதத்திற்கு முற்பட்டது இராமாயணம். இராமாயண காலத்தில் சிவபூசை செய்த பெருமைக்குரியவன் இலங்கை மன்னனாகிய இராவணன். சிவபூசை தொடங்குவதற்கு முன் விக்கினேஸ்வர பூசை செய்தல் வேண்டும். எனவே, விக்கின விநாயகரது வழிபாடு கி. மு. 5000 ஆண்டுகட்கு முற்பட்டது என்று ஆராய்ச்சியாளர் கருதுவதில் தவறெதுவும் இல்லை.

நாதம், விந்து ஆகிய இரண்டு தத்துவங்களே சிவமும் சக்தியும் எனத் தத்துவ விளக்கத்தில் குறிப்பிடப்படுகிறது. நாதம் சிவம், விந்து சக்தி. சிவமும் சக்தியும் இணைந்து தோன்றும் உருவமே விநாயகரது தோற்றம் என்றும் குறிப்பிடப்படுகிறது. இதனாலேயே விநாயகர் "வல்லபாம்பிகா சமேத விக்கினேஸ்வராய கம" என்று சிறப்பாகத் துதிக்கப்படுகின்றார். முறிந்த கொம்பு உள்ள பகுதி விந்து தத்துவமாகவும், துதிக்கை நாதத்துவமாகவும் அமைந்து காணப்படுவதால் விநாயகரை வணங்கினால் பார்வதி பரமேஸ்வரரை வணங்கிய பலன் கிடைக்கும் என பக்தர்கள் கருதி வழிபட்டு யோக, போக மோக்ஷ பலன்களைப் பெற்றதாகப் புராண வரலாறுகள் குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

சிவாகம முறைப்படி அமைந்த ஆலயங்கள் யாவற்றிலும் விநாயகர் பூசையின் பின்பே மூலமூர்த்திக்குப் பூசை செய்யும் முறை இன்றும் நடைமுறையில் இருப்பதை நாம் அவதானிக்கலாம். இவ்விதமாகச் சிறப்புப் பெற்ற விநாயகப் பெருமானை வழிபடுவது மிகவும் சுலபமானது. சாணத்தில், சந்தனத்தில், மஞ்சளில் விநாயகரை அமைத்து எழுந்தருளியிருக்குமாறு செய்து அறுகம் புல்லினால் அருச்சித்து, வேண்டும் வரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

"நற்குஞ்சரக்கன்று கண்ணில் கலை ஞானம் கற்குஞ்சரக் கன்று காண்" என்பது சைவ சித்தாந்த அறிவுரை. விநாயகப் பெருமானது கருணை எமக்குக் கிடைத்துவிட்டால், கலை ஞானக் கல்வி வருந்திக் கற்க வேண்டியது ஒன்றன்று. இதன் கருத்தை விளக்குவதற்கே ஔவையார்,

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா"

என்று பாடினார்.

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" என்னும் பாடல் பிரணவப் பொருளாக விளங்கும் விநாயகரது பெருமையை எமக்குச் சுட்டிக் காட்டுகின்றது. சிவம் என்றும் மாறுபாடு எதுவும் இன்றி இருந்த படியே ஆகுன் பொழியும் ஆற்றல் வாய்ந்தது. சக்தி காரியப்பட்டு ஆன்மாக்களுக்கு அருள் பொழிவது சிவம் சக்தியை நோக்க, சக்தி காரியப்பட்டு எழுத்துக்கள் உதயமாயின. எழுத்துக்கள் அனைத்தும் சிவசக்தி சம்பந்தமானவை. அந்த எழுத்துக்களுள்ளே முதன் முதலில் தோன்றியதும் எல்லா எழுத்துக்களும் தோன்றுவதற்குக் காரணமானதும் பிரணவமே. எனவே பிரணவப் பொருளாக விளங்கும் விநாயகரே முதன் முதலில் தோன்றிய உருவ வழிபாட்டுத் தெய்வம் எனத் தத்துவ விளக்கம் விரித்துரைக்கின்றது.

"ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன் ஆறு
தரு கோட்டம் பிறையிதழித்
தரும்ஒருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும் வணங்கி
ஓவாதே இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அவன் திருமால்
செல்வமு மொன்றோ வென்னச் செய்யும்தேவா"

என்று சிவஞானசித்தியார் என்னும் நூலின் காப்புப் பாடல் குறிப்பிடும் போது, விநாயகப் பெருமானுக்கு ஒரு கொம்பு, இரு செவி. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மதங்களையும் அடக்கும் ஆற்றலுடையவர் என்பதை அறிகிறோம். தொங்குகின்ற துதிக்கையுடன் கூடிய பிறைச் சந்திரன் போன்ற கொம்புடன் விளங்கும் விநாயகப் பெருமானை உள்ளன்புடன் வழிபட்டால் மனதில் துன்பத்தை நீக்கி, பிரமா, விஷ்ணு முதலானோர்களை விட மேலான செல்வம் உடையவர்களாகச் செய்யும் ஆற்றல் உண்டு என அருணந்தி சிவாசாரியார் குறிப்பிடுவதை நோக்கும் போது, விநாயகரது வழிபாடு மேலான செல்வத்தை எமக்குக் கிடைக்கச் செய்யும் பலனைத் தரவல்லது என்பது தெளிவாகிறது.

விநாயகர் சதுர்த்தி பிள்ளையார் பெருங்கதை முதலான விரதங்கள் விநாயகர் அருள் பெறுவதற்கு உரிய விரத நாட்களாகும்.

விநாயகர் புராணம் விநாயகர் அருள்புரிந்த வரலாறுகளை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறும் போது, விஷ்ணுமூர்த்தி, இந்திரன், ஆதிசேடன் முதலான பலவகையானவர்களும் தம்மை வந்து வழிபடும் போது அருள் பொழிந்த வரலாறுகளை மிகத் தெளிவுபடுத்துவதை நாம் காணலாம்.

விநாயகருடைய வாகனம் எலி. பார்வைக்கு மிகச் சிறிய பிராணியாகத் தோன்றுகின்றதே என ஆச்சரியமாயிருக்கலாம். ஆனால் கந்த புராணத்திலே அதன் விளக்கத்தைப் பார்க்கும் போது, ஆணவமே உருவமான கயமுகாசூரன் எலி வடிவில் விநாயகப் பெருமானுடன் போர்புரிய வந்த போது, ஆணவத்தை அடக்கி, எலியைத் தனது வாகனமாக ஆக்கியருளியதை நாம் அறிகிறோம்.


தலையில் மும்முறை குட்டி காதில் இருகரங்களாலும் பற்றிப் பிடித்துத் தோப்புக் கரணம் போடும் போதும், நாம் எமது ஆணவச் செருக்கு முழுவதும் அடங்கிய நிலையில் விநாயகப் பெருமானை வணங்க வேண்டும் என அறிவுறுத்தப் பெறுகிறோம்.


நாம் பரிபூரணமாகச் சரணடைந்து வழிபடும் போது விநாயகப் பெருமானது பரிபூரண கிருபாகடாட்ஷத்தைப் பெறுகிறோம். அன்றாட வாழ்வில் எக்கருமத்தைத் தொடங்கினாலும் விநாயகர் வழிபாட்டுடன் தொடங்கினால் அக்கருமம் அனைத்தும் வெற்றியாக முடிவுறுவதை அனுபவத்தில் அறிந்து விநாயகப் பெருமானை வழிபட்டு எல்லாப் பெருஞ் செல்வமும் பெற்று இன்புறுதற்கு நாம் எமது மனதை நல்வழிப்படுத்துதல் வேண்டும்.

விநாயகர் வழிபாடு எமது நாட்டிலே கி. மு. 5000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது என்பதற்கு இராமாயணம் சான்றுரைக்கின்றது. அன்று முதல் இன்று வரை எல்லா ஆலயங்களிலும் விநாயகர் சந்நிதானமும், விநாயகருக்குத் தனிக் கோயில்களும் அமைத்து வழிபடும் சிறப்புமிக்க சைவத்தமிழ் மக்கள் நாட்டிலே, சாந்தி, சமாதானம், அமைதி வேண்டி விநாயகப் பெருமானை வேண்டுதல் செய்து பிரார்த்தித்து இஷ்டசித்திகளைப் பெறுவோமாக.

சிவஞானவாரிதி, சைவ சித்தாந்த காவலர்,
ஞான சிரோன்மணி,
கு. குருசுவாமி

❊ ❊ ❊ ❊ ❊ ❊ ❊





UNITED

# சிவ வழிபாடு

சிவனை முழுமுதலாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவசமயமாகும். சைவக் கோயில்களில் நிகழும் கிரியைகள் வழிபாடுகள் அனைத்துமே திருவுருவங்களை அடிப்படையாகக் கொண்டவை. இத்திருவுருவங்களே கிரியைகளில் நடு இடம் வகிப்பன. இறைவன் ஏற்ற திருமேனிகள் எல்லாம் சில சம்பவங்களைப் பற்றியனவாய், அவற்றைச் சித்தரிக்கும் வண்ணம் உருவாகியுள்ளன. சிவனின் திருவுருவம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு செயலின் சிறப்புநிலை எடுத்துக் காட்டப்பட்டிருக்கக் காண்கின்றோம். இச் செயல்களின் விரிந்த வரலாறுகளை எடுத்துக் கூறும் நூல்கள் இதிகாச புராணங்களாகும். சிவனின் அருட்டிரு விளையாடல்களைக் கூறுவனவாக விளங்குகின்றன.

புராணங்கள் சிவனின் இரு வகைத் தோற்றங்களைக் குறிப்பிடுவன. ஒன்று சாந்த வடிவினதாய் உயிர்களுக்கு நன்மை விளைவிக்கும் தோற்றம். மற்றையது உக்கிரகம் மிகுந்ததாய்த் தீயவர்களுக்குத் தீங்கு விளைவிப்பது. அரக்கர்களை அழித்த வேளைகளில் இவ்வாறு பயங்கர உருவங்களை இறைவன் கொண்டதாகப் புராணங்கள் கூறும்.

சிவனின் திருமுகங்கள் ஐந்து. இவை ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பன. இம்முகங்கள் அனைத்திற்கும் தனித்தனி நிறங்கள் உண்டு. இவை முறையே வெள்ளை, சிவப்பு, மஞ்சள், நீலம், வெண்சிவப்பு என்பன. இவ்வைந்து முகங்களும் ஐந்தொழில்களுடன் தொடர்புறுவன.

சிவனின் சடை தனிச் சிறப்பு வாய்ந்தது. சடை மேல் நோக்கியதாக முடிந்து கட்டப்பட்டு விளங்கும். நீர்மலிவேணியன், சடாதரன், சடாமௌலி என்றெல்லாம் சடையின் சிறப்பினை உணரும் வண்ணம் சிறப்பித்துக் கூறப்படுகின்றான்.

சிவனுக்குச் சிறப்பாய் உள்ளது நெற்றிக்கண். இதனால் மூன்று கண்களை யுடையவனாய் முக்கண்ணன் எனச் சிறப்பிக்கப்பட்டு திரியம்பகன் எனப் பெயர் பெறுகின்றான். நெற்றிக் கண் அக்கினியெனப் புராணங்கள் கூறுகின்றன. சூரியனும், சந்திரனும் சிவனின் மற்றைய இரு கண்கள்.

சிவனின் கரங்களையும் பலவாறு கூறுகின்றன புராணங்கள். நான்கு திருக்கரங்கள் உடையவனாகவே தென்னிந்தியத் திருக்கோயில்களிலும், இலங்கைக் கோயில்களிலும் மிகுதியாக திருவுருவங்கள் அமைக்கப்பட்டு விளங்குவதனைக் காண்கின்றோம். இவர் "எண்டோள் வீசி நின்றாடும் பிரான்" என்றும் குறிப்பிடப்படுகின்றார்.

சிவனின் கழுத்தும் தனிச் சிறப்பு வாய்ந்தது. இது நீலநிறம் பொருந்தியது. நஞ்சுண்டவேளை கறை படிந்து நீலநிறம் பெற்றதனால் "நீலகண்டன்" என்னும் பெயர் பெற்றார். சிவனின் நிறம் பலவாறாகக் கூறப்பட்டிருக்கின்றது. கரிய நிறத்தினன், உருக்கி வார்த்த பொன்னிறத்தினன், ஒளிவீசும் அக்கினி வடிவினன், சிந்தூரப் பொடிவண்ணன், மின்னலை நிகர்க்கும் தோற்றத்தினன் என்று பலவாறாகப் புராணங்கள் எடுத்துக் கூறும்.

சிவனின் திருவுருவத்தைப் புராணங்கள் பலவாறு விதந்து கூறுகின்றன. இவ்வுருவம் எட்டு அம்சங்களைக் கொண்டது. நீர், நிலம், தீ, வளி, விசும்பு என்னும் ஐம்பூதங்களும், சூரியன் சந்திரனாகிய இரு கோள்களும், வேட்கும் இயல்பினனான இயமானனும் இவ்வெட்டு உறுப்புகள். இதனாலே அட்டமூர்த்தி என்னும் சிறப்புப் பெயர் பெறுகின்றான்.

சிவனின் புறத்தோற்ற இயல்பினை வருணிக்கும் புராணங்களிற் சில இவரைத் தலைசிறந்த யோகியாகச் சித்தரிக்கின்றன. உடை தோலால் ஆனது. "புலித்தோலை அரைக்கசைத்தவன்" எனப் புராணங்கள் சுட்டிக் கூறுகின்றன. உடல் முழுக்க சுடலைப் பொடி பூசிப் பொலிந்து விளங்குவார் என்பதனால் "சுடலைப் பொடி பூசிய பெம்மான்" எனப் புராணங்கள் கூறுகின்றன.

அணிகலன்களாக தலையில் கிரீடத்தில் சந்திரன், பாம்பினை கையில் வளையங்களாகவும், கடகமாகவும், அரையில் ஞாணாகவும், பூணூலாகவும் தரித்திருக்கின்றான். பத்மன், பிங்கலன் என்னும் இரு நாகங்களுமே குண்டலங்களாகக் காதில் விளங்குகின்றன.

உக்கிர வடிவங் கொள்ளும் வேளையில் மண்டையோடுகள் அவருடைய உடலை அலங்கரிப்பன. பிநாகம், சூலப்படை, மழுவாயுதம், கதை, டங்கம், வாள், கத்தி, தண்டம், வச்சிரம், கேடயம், வில்லு முதலியன சிவனது படைக்கலங்களாகும்.

எம்பெருமானின் ஊர்தி இடபம், உறைவிடம் கைலை, ஈசான திசை வசிக்கும் திசை, கொடி இடபக்கொடி, ஏவலாளர்கள் பூதகணங்கள், உமை பத்தினி, (சிறந்த பத்தினியான உமைக்கு சசிதேவி என்னுஞ் சிறப்புப் பெயரும் உண்டு) கணபதியும், கந்தனும் மைந்தர்கள். திருநாமங்கள் பல. உருத்திரன், பவன், சர்வன், ஈசானன், பசுபதி, மகாதேவன், சங்கரன், சதாசிவன் எனப் பலவாகும்.

சிவனின் வீரச் செயல்களையே புராணங்கள் பெரிதும் விளக்கிக் கூறுகின்றன. இவற்றில் தலை சிறந்தவை எட்டுச் செயல்கள். இவற்றிற்கு அட்ட வீரட்டாங்கள் என்ற பெயர் உண்டு. வீரச் செயல்கள் புரிந்த இந்நிலையில் வைத்து இறைவனைத் தியானித்து வழிபட வழி காட்டியவை சிவாகமங்கள்.

சிவனின் மூர்த்தி பேதங்கள் 64 இனுள் முதலில் கூறப்படுவது இலிங்கம். 64 மூர்த்தி பேதங்களில் இலிங்கம், இலிங்கோற்பவர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், பைரவர், வீரபத்திரர், நிருத்த மூர்த்தி, தக்ஷிணாமூர்த்தி, பிக்ஷாடண மூர்த்தி ஆகிய ஒன்பது மூர்த்திகள் இலங்கையிலும், இந்தியாவிலும் உள்ள பெரும்பாலான கோயில்களில் வழிபாட்டிற்காக நிறுவப்பட்டிருக்கக் காண்கின்றோம்.

சைவவழிபாட்டில் இலிங்கம் முக்கிய இடம் பெறுகின்றது. பாரத நாட்டில் சிவனுக்குக் கோயில் அமைந்துள்ள இடங்களிலெல்லாம் வழிபடுவதற்கு இலிங்கத்தையே முக்கிய விக்கிரமாகத் தேர்ந்து நிறுவியுள்ளார்கள். கோயிற்கருவறைகளில் நிறுவப்படுவது இலிங்கமே. இவ்வுண்மைகள் இலிங்க வழிபாட்டின் தனிச் சிறப்பினையும், முக்கியத்துவத்தினையுமே சுட்டிக் காட்டுகின்றன

சிவனுக்கெனச் சிறப்பாக உள்ள திருமேனிகள் மூன்று. அருவம், உருவம், அருவுருவம், அருவுருவத்திருவுருவம் சிவனுக்கு மட்டிலும் சிறப்பாயமைந்தது. இது உருவத்திற்கு வேண்டுவனவான கை, கால், முதலிய உறுப்புக்கள் இல்லாததினால் அருவமாகியும், கண்ணால் பார்க்கும் பொழுதும், உணரத் தக்கதனால் உருவமாகியும், இருநிலைகளும் உடையதாய் விளங்குவது அருவுருவமாகும்.

இலிங்கம் உயரிய தத்துவங்கள் பலவற்றை உணர்த்தி நிற்பது. லிங்கம் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு "அடையாளம்" என்பது கருத்து. சிவனைக் குறிக்கும் குறியாக நிறுவப்பட்டமையால் இது லிங்கனாயிற்று. பிரமமனும், திருமாலும் அடிமுடி தேடும் வண்ணம் இறைவன் ஒளிவீசும் தீப்பிழம்பாய்த் தோன்றிய நிலையினை நினைவூட்டுவது இலிங்கம். தேவர் வேண்டத் தீப்பிழம்பு வடிவம் நீங்கி இலிங்க வடிவாயினன் எனச் சமய நூல்கள் பகரும். இலிங்கத்தின் குவிந்த தோற்றம் இவ்வுண்மையினைத் தெளிய வைக்கின்றது.

இலிங்கங்களை நூல்கள் இரு வகையாகக் கூறும். ஒன்று சலலிங்கம், மற்றது அசலலிங்கம். சிவலிங்கத்தின் அமைப்பு முறையினை நோக்கின் இவ்விக்கிரகத்தின் அடிப்பாகத்தில் உடுக்குப் போன்ற பீடம் ஒன்று காணப்படும். இதற்கு ஆவுடையென்று பெயர். இதன்மேல் உருண்ட, நீண்ட, முனையற்ற தண்டொன்று காணப்படும். இதற்கு பாணம் அல்லது லிங்கம் என்ற பெயர். இவற்றுடன் ஆவுடையின் மேற்பாகத்தில் ஒரு பக்கமாகக் கோமுகம் ஒன்றும் காணப்படும்.

ஆவுடை சக்தியைக் குறிக்கும். பாணம்-லிங்கம் ஆவுடையின் மீது தோன்றிச் சிவத்தினது உண்மைச் சொரூபமாகிய பரவெளியைக் குறிக்கின்றது. கோமுகி-ஆவுடையின் மேற்பாகத்தில் வெளியே நீண்டிருக்கும். இது சிவசக்தி உயிர்களுக்குச் செய்யும் அருளைக் குறிக்கின்றது. இதனாலேயே ஆலய வழிபாடு செய்யும் நாம் கோமுகி வழியாகப் பாயும் அபிஷேக தீர்த்தங்களை இறைவன் திருவருள் சுரப்பதாக மதித்துக் கையால் ஏந்தித் தலையில் தெளித்து சிவனருள் பெற்றதாக மகிழ்கின்றோம்.

அடுத்து நாம் சிவபூசை செய்வதன் பொதுவிதி பற்றிப் பார்ப்போமானால், சிவபூசையானது ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசையென இருவகைப்படும். ஆசாரியரிடம் தீட்சை பெற்றுக் கொண்டதும், ஆசாரியார் சீடனைப் பார்த்து நீ இறக்கும் வரையும் கைவிடாது இவரை நாடோறும் பூசி என்று அனுமதி செய்து, "அடியேன் இச்சரீரமுள்ள வரையுஞ் சிவார்ச்சனை செய்தன்றி ஒன்று முண்ணேன்" என்று சங்கல்பம் செய்து கொண்டு கொடுக்க, அவன் வாங்கிப் பூசிப்பது இட்டலிங்க பூசை அல்லது ஆன்மார்த்த பூசையாகும். எல்லா ஆன்மாக்களுக்கும் அனுக்கிரகஞ் செய்யும் காரணமாகக் கோயில்களில் பிரதிஷ்டை செய்து பூசிப்பது பரார்த்தலிங்க பூசையாகும்.

பூசிக்கத்தக்க லிங்கங்கள் க்ஷணிகலிங்கம், பொன் முதலிய லோகங்களாலாகிய லிங்கம், இரத்தினங்களாலாகிய லிங்கம், சைலலிங்கம், வாணலிங்கம் முதலியனவாம். ஒவ்வொரு வகைப் பொருட்களால் அமைந்த லிங்கத்தினைப் பூசிப்பவருக்கு ஒவ்வொரு வகைப் பலன் கிடைக்கும் என ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது.

சோமவாரவிரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுவர விரதம், சிவராத்திரி விரதம், கலியாணசுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம், பிரதோஷ விரதம் என்னும் ஒன்பதும் சிவனுக்குரிய விரதங்களாகும். இவற்றில் அதி முக்கியத்துவம் பெற்றுத் தேவாலயங்களனைத்திலும் பெரிதும் கடைப்பிடிக்கப்படுவன பிரதோஷம், ஆர்த்திரா உற்சவம், சிவராத்திரி ஆகியன.

முக்கிய விரதமாகிய சிவராத்திரி விரதம் அனுட்டிக்கும் முறை பற்றி நோக்குவோம். சிவனுக்குரிய விரதங்களுள் சிறப்பு வாய்ந்த சிவராத்திரி விரதமாவது மாசிமாதத்துக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி திதியிலே சிவனைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும். இதில் உபவாசஞ் செய்து நான்கு யாமமும் நித்திரையின்றிச் சிவபூசை செய்தல் வேண்டும். நான்கு யாமப் பூசையும் அவ்வக் காலத்தில் செய்வது உத்தமம், ஒரு காலத்திற் சேர்த்து செய்வது மத்திமம்.

சிவராத்திரி விரதமனுட்டிப்போர் முதல்நாள் ஒரு பொழுது உணவருந்தி மனம் தூயவராய் துயின்று விடியற்காலத்தில் எழுந்து நித்திய கருமம் முடித்து சிவாலயம் சென்று சிவனை வணங்கி விதிப்படி நான்கு யாமமும் சிவபூசை செய்ய வேண்டும். சிவபூசை செய்யாதவர்கள் நித்திரையின்றி, ஸ்ரீ பஞ்சாட்சர செபமும் சிவபுராண சிரவணமும் செய்து நான்கு யாமமுஞ் சிவாலய தரிசனம் பண்ண வேண்டும். இரவு முழுக்க விழித்திருந்து அடுத்த நாள் அதிகாலையில் நித்திய கடன்களை முடித்து ஆலய வழிபாடு செய்து காலையில் 8.30 மணிக்கு முன்பு சிவனடியாரோடும் சுற்றத்தாரோடும் பாராணஞ் செய்தல் வேண்டும். பாராணஞ் (பாரணை) செய்த அத்தினத்தில் சிவபுராணம் ஓதுதல், சிவன் பெருமைகளைப் படித்தல் முதலிய சிந்தனைகளுடன் பகலுறக்கமின்றி இருத்தல் அசியமாகும்.

ஒவ்வொரு யாமத்திற்கும் இறைவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டிய பொருட்கள், அர்ச்சிக்க வேண்டிய மலர்கள், நிவேதிக்க வேண்டிய பொருட்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவ்வப் பிரகாரம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

| யாமம் | அபிஷேகப்பொருள் | சாத்துப் பொருள் | அர்ச்சிக்கும் மலர் |
|---|---|---|---|
| 1ம் யாமம் | பஞ்ச கவ்வியம் | சந்தனக் குழம்பு | வில்வம், துளசி, தாமரை. |
| 2ம் யாமம் | பஞ்சாமிர்தம் | அகிற்குழம்பு | தாமரை, துளசி. |
| 3ம் யாமம் | தேன் | பச்சை கற்பூர சுண்ணம் | சண்பகம், வில்வம். |
| 4ம் யாமம் | கருப்பஞ்சாறு | குங்குமம் | நந்தியாவத்தம், வில்வம், நொச்சி, மாவிலங்கை, முட்கிளுவை, விளா. |

சிவனுக்கென தனி ஆலயங்கள் பல எமது நாட்டில் அமைந்துள்ளன. தேவாரப் பாடல் பெற்ற தலங்களாகவும் புராண மகிமை பெற்ற தலங்களாகவும் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கீரிமலை நகுலேஸ்வரம் விளங்குகின்றன. இவற்றை விட கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரம், ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரம், மாமாங்கேஸ்வரம், கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரம், அருணாசலேஸ்வரம் ஆகியன சிறப்பும் பெருமை பெற்ற சிவாலயங்களாகத் திகழ்கின்றன. காரைநகர் சிவன்கோவில் ஈழத்துச் சிதம்பரம் என்ற பெயரில் விளங்குவதும் குறிப்பிடத்தக்கது.

முழுமுதற் பொருளாக எமக்கு அம்மையப்பனாக விளங்கும் சிவனைப் போற்றி வணங்கி உயர்வடைவோமாக.

சாந்தி நாவுக்கரசன்,
பிரதிப் பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள்
திணைக்களம்.

உ

## சகலமும் நின்திருச் சொரூபம்

சிவனுக்குரிய திருநாமங்களுள் அம்மையப்பர் என்பதும் ஒன்று. அனைத்துயிருக்கும் தாயாகி அருள்பாலித்தலினால் இறைவன் தாயுமானவர் எனப் போற்றப் பெறுவர். இறைவனது அருளின் வடிவமே அம்மை. அம்மை அருளின் உருவாய், சக்தியின் தோற்றமாய்த் திகழ்கிறாள். சிவனில் நின்றும் வேறாகாத சக்தியாகத் திகழ்பவர் உமையம்மை.

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்"

என்பது திருவருட்பயன்.

(தனது நிலைமையாகிய கர்த்தாவினுடைய திருவடித்தாமரையிலே நிலைபெற்ற ஆன்மாக்கள் பொருந்துமாறு அவனுடைய சக்தியருளும். சக்தியென்றும் அவனென்றும் பின்னமிலாதவன் எங்கள் இறைவன் என்பது குறளின் பொருள்) அடியார்களுக்குக் காட்சி கொடுக்கும் போதெல்லாம் இறைவன் உமையொருபாகமாகவே வருவர். இதனைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான்,

"ஆரணமும் உலகேழுமீன்றருளி அனைத்தினுக்கும் காரணமாய்
வளம்பெருகு கருணை திருவுருவான சீரணங்கு" எனவும்,
"அருட்கருணைதானாய திருவுள்ளமுடைய தவவல்லி எனவும்

இவை போலும் அமைந்த வாக்குகளால் புலப்படுத்தியுள்ளமை நோக்கற்பாலது. இன்னும் உமாதேவியாரை, ஆளுடைய நாயகி, எம்பிராட்டி, ஏழுலகீன்றவள் தனிநாயகி, அறம்பயந்தவள், பார்பதி என்றின்ன தொடர்களால் பெரிய புராண ஆசிரியர் குறிப்பிடுவர். இவையெல்லாம் இறைவியினது அருள் நோக்கியன்ற பல்வகைய பண்புகளை உணர்த்தி நிற்பவை.

"சகலமும் நின்திருச் சொருபம்" என்பது குமரகுருபரர் வாக்கு. "சர்வம் சக்திமயம்" என்பது ஓர் வேதக்கூற்று. இவை இறைவியை ஆதிபராசக்தி என்ற நிலையில் உணர்த்துவன. ஆதிபராசக்தியே உலகின் அனைத்துச் சக்திகளுக்கும் அன்னையாக விளங்குகிறாள். அகிலாண்ட நாயகியாகிய அம்பிகையே அனைத்துலகையும் படைப்பவள். அவள் புவனங்களைப் படைக்கும் திறத்தை சிறு பெண்பிள்ளை சோறு சமைத்து விளையாடுதலாகிய நிகழ்வில் வைத்து விளக்குகின்றார் கவிஞர் ஒருவர். மீனாட்சியம்மையைப் பச்சிளம் பெண்பிள்ளையாகக் கண்டு புவனமாகிய கலத்தில் புதுக்கூழ் சமைப்பதாகக் காட்டுகிறார் கவிஞர் குமரகுருபரர். இப்பொருள்

> "எற்றுபுனலிற் கழுவு புவனப் பழங்கலம்
> எடுத்தடுக்கிப் புதுக்கூழ் இன்னமுதமும் சமைத்து"

என்னும் அடிகளால் உணர்த்தப்படுகின்றது. பிரளயகால வெள்ளத்திலமிழ்ந்ததாகிய புவனத்தையெடுத்து அடுக்கிப் புதுக்கூழ் சமைக்கிறாள், அம்பிகை. புதுக்கூழ் என்பது சமையல் பொருளில் புதிய கூழ் எனவும், சமயப் பொருளில் படைத்தலாகிய தொழிலை உணர்த்தும் புதுக்கு ஊழ் (ஊழ் - படைப்பு முறைமை) எனவும் பொருள் கொள்ள நின்றது.

அம்பிகை சக்தியால் உலகாகும் தன்மை போல், தோற்றத்தாலும் சர்வ வியாபாகமாகத் திகழ்கின்றாள். அம்மையின் இச்சர்வவியாபக இயல்பைக் கடவுள் மாமுனிவர்

> "ஆடக சிதம்பர அணங்குமை யணங்கிலா
> நாடகன் அனந்தசுகம் நன்குபுனை பங்கினாள்
> ஏடக மணம் பொருவ எங்கணும் இயைந்துள்ளான்
> பாடகம் இலங்குசிறு பங்கயம் இறைஞ்சுவாம்"

என்ற பாடலால் புலப்படுத்துவர்.

(மலரின் மணம்போல் எங்கணும் வியாபித்து நிற்பவரும் தரிசித்த ஆன்மாக்களுக்குப் பிறவித் துன்பத்தை இன்மை செய்யும் திரு நடனத்தைப் புரியும் சபாநாயகரது வரம்பிலின்பத்தை நுகர்பவரும் இறைவனது வாமபாகத்தையுடையவரும் சிதம்பரத்தில் நிருத்த சாட்சியாய் நிற்பவருமாகிய அழகுடைய சிவகாமி அம்மையினது சதங்கை விளங்கும் தாமரைப் பாதங்களை வணங்குவாம், என்பது பொருள்) அம்பிகை இறைவனது ஆடலைப் பார்த்து நுகர்ந்து நிற்பதானது, இறைவனது ஆடலிற் றோன்றிப் பிரவாகிக்கும் அரு(ள்) மருந்தைத் தான் நுகர்ந்து, உயிர்கள் மீண்டும் பிறந்துழலுதலாகிய வருத்தத்தை நீக்கும் பணியில் ஈடுபட்டிருத்தலைக் குறிப்பதாகும். இறைவியின் இவ்வியல்பைக் குமரகுருபரர் விளக்கும் பாங்கு இனிமை பயப்பது.

> "ஆட்டுகின்றாரின்றி மன்றுள் ஆடும் ஆனந்தத்தேன்
> காட்டுகின்ற முக்கட் கரும்பொன்று - வேட்டதனை
> உற்று நெடுநாளாக உண்ணுமோர் மால்யானை
> பெற்றதொரு கூந்தற் பிடி"

என்பது அவரின் பாடல். ஒரு கரும்பு ஆலையில் ஆட்டுவாரின்றி ஆடுகிறது. அதனை ஒரு யானையைப் பெற்ற பிடி ஒன்று நெடுநாளாக உண்ணுகின்றது என்பது மேலோட்டமான பொருள்.

(நட்டுவனாரின்றித் தாமே ஆனந்தமாகிய தேனைத் தன்னகத்தே கொண்டுள்ள மூன்று கண்ணுடைய (சிவபிரானாகிய) கரும்பு ஆடிக் கொண்டிருக்கின்றது. அதனை, விநாயகராகிய யானையைப் பெற்ற சிவகாமியாகிய பெண் யானை உண்டவண்ணம் இருக்கின்றது.)

பஞ்சகிருந்தியத்தைப் பரமன் இயற்றி நிற்கப் பச்சைப் பசுங் கொடியாகிய சிவகாமவல்லி பக்கத்தில் நின்று பார்த்துச் சுவைக்கின்ற நோக்கம் உன்னதமானது. குழந்தையின் பசுங்குடல் மருந்ததைச் செரிக்கும் சக்தியற்றதாதலின் அதன் நோய்க்குரிய மருந்தைத் தானே உண்டு அதன் பயனைப் பாலின் வழியே குழந்தை பெறும்படி ஊட்டும் தாயைப் போல சிவகாமியம்மை இறைவனின் நடனத்தைத் தான் தரிசித்து அதன் பயனை உயிர்கள் நுகர வைக்கிறாள். இறைவனது பிரவகித்து வரும் பேரருள் ஆன்மாக்களின் பக்குவத்திற்கு ஏற்ப ஊட்டப்படல் வேண்டும். மின் காந்தத்தை வாங்கி, மிதப்படுத்திச் செலுத்தும் கடத்தி போன்று அம்பிகை திகழ்கின்றாள்.

பிள்ளைகள் தமது தந்தையிடம் பெற வேண்டியவற்றைத் தாய் மூலம் விண்ணப்பித்துப் பெறுதல் இயல்பு. அது போலவே அன்னையாகிய பராசக்தி மூலம் இறைவனது அருளைப் பெறும் உபாயத்தை மேற்கொள்ளல் தகும். இவ்வகையில் அம்பிகையின் பால் தனது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் படிக்காசுப் புலவனின் பாடல் ஒன்று சுவை பயப்பது.

"ஆய்முத்துப் பந்தரின் மெல்லணைமீதுன் அருகிருந்து
நீமுத்தம் தாவென் றவர் கொஞ்சும் வேளையில் நித்த நித்தம்
வேய்முத்தரோடென் குறைகளெலா மெல்ல மெல்லச் சொன்னால்
வாய்முத்தம் சிந்திவிடுமோ நெல்வேலி வடிவம்மையே."

என்பது அப்பாடல்.

(அம்மையே நினது இறைவன் மெல்லணையில் நின்னுடனிருந்து சல்லாபிக்கின்ற இனிய செவ்வி பார்த்து எனது குறைகளை மெல்ல எடுத்துச் சொல்லல் ஆகாதோ என்பது பொருள்)

"உங்கையிற் பிள்ளை உனக்கே யடைக்கலம்" என்று நாம் நம்மை இறைவி பால் அர்ப்பணித்து அவள் அருள் பெற்றுய்வோம்.

– பிள்ளைக்கவி. வ. சிவராஜசிங்கம்

❄ ❄ ❄ ❄ ❄ ❄ ❄



# விநாயகர் சஷ்டி விரதம் (பெருங்கதை விரதம்)

விரதம் என்கின்ற சொல்லுக்கு உறுதி என்பது பொருள். விரதம் என்று சொன்னால் மனதை ஒருமைப் படுத்துகின்றேன் என்று அர்த்தம். மும்மணிகள் போல விநாயகருக்குரிய மூன்று சிறப்பான விரதங்கள் பற்றி முக்கியமாக நோக்கலாம். வாரந்தோறும் அனுஷ்டிக்கும் சுக்கிரவார விரதமும், மாதந்தோறும் அனுஷ்டிக்கும் சதுர்த்தி விரதமும், வருடத்தில் ஒரு தடவை கைக்கொள்ளப்படும் விநாயக சஷ்டி விரதமும் அவையாகும்.

நினைத்த காரிய சித்தி, தடை நீக்கம் என்பனவே பொதுவாக விநாயக விரதங்களின் நோக்கமாகும். விநாயகர் சஷ்டி விரதம் பிள்ளையார் பெருங்கதை விரதம் அல்லது பிள்ளையார் நோன்பு என அழைக்கப் படும். இவ்விரத மகிமை பற்றி நாம் சிறப்பாக நோக்குவோம்.

கார்த்திகை மாதத் தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை ஷஷ்டி வரையிலான இருபத்தொருநாள் விரதம், பிள்ளையார் பெருங்கதை விரதமாகும்.

இவ்விரதம் அனுஷ்டிக்கும் முறை பற்றி நாம் நோக்கின் முதல் இருபது நாளும் ஒரு பொழுது மட்டும் போசனம் செய்ய வேண்டும். இரவு பால், பழம் அல்லது பலகாரம் உண்ணலாம். தினமும் விநாயகருக்கு இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை என்பன நிவேதனம் செய்து விநாயகரின் பெருமையினையும் வரலாற்றினையும் கூறும் பெருங்கதை விநாயகர் புராணம் முதலியனவற்றைப் படித்தும் கேட்டும் விநாயகர் அகவல், விநாயக கவசம் போன்றவற்றைப் பாராயணம் செய்தும் வழிபாடு செய்தல் வேண்டும்.

இறுதிநாள் விசேட பூசை வழிபாடுகள் செய்து உபவாசமிருந்து மறுநாள் பாரணை செய்தல் வேண்டும்.

இவ்விரத ஆரம்ப நாளில் இருபத்தோரிழையிலான விரதக் காப்பினை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் கட்டிக் கொள்வர். இவ்விரதத்திற்கும், ஸ்கந்த சஷ்டி விரதத்துக்கும் மட்டும் விரதாரம்பத்தில் பவித்திரமணிந்து சங்கல்பம் செய்யும் போது காப்புக் கட்டும் வழக்கம் உண்டு. இக்காப்பு விரதம் முடிந்த மறுநாள் அதாவது பாரணையிலன்று காலை பவித்திரவிசர்ஜனத்துடன் அவிழ்க்கப்பட வேண்டும்.

கந்தபுராணம், லிங்க புராணம், உபதேச காண்டம் ஆகியவற்றிற் காணப்படும் இவ்விரத மகிமையை பிள்ளையார் கதை என்ற பெயரில் வரதபண்டிதரவர்கள் தனிநூலாகச் செய்திருக்கின்றார். இதனையே நாம் ஆலயங்களில் இவ்விரத நாளில் படிக்கின்றோம்.

இவ்விரதத்துடன் தொடர்புடைய புராணக் கதையினை நோக்கினால் முன்பொரு சமயம் மகாவிஷ்ணு பொய்ச்சாட்சி சொன்னதால் தமக்கேற்பட்ட சாபத்தினை விநாயகரை வணங்கி நீங்கப் பெற்றார். இச்சாபம் நீங்கப் பெற்ற தினமாகிய மார்கழி மாத வளர்பிறை சஷ்டி நாளே விநாயகர் சஷ்டியாகும். இந்நாளை இறுதியாகக் கொண்ட இருபத்தொருநாள் விரதத்தை பெருங்கதை விரதமென்பர்.

விக்கிரமாதித்த மன்னனின் மனைவிகளுள் ஒருத்தியான இலக்கணசுந்தரி என்பவள் தான் அனுஷ்டித்து வந்த விநாயகர் சஷ்டி விரதத்தை இடையிலே கைவிட்டு அந்த விரதக் காப்பையும் அவிழ்த்து வீசிவிட்டாள். இதனால் அவள் பலவித இன்னல்களையும் துன்பத்தினையும் அடைந்தாள். இறுதியில் ஔவைப் பிராட்டியின் அறிவுரைப்படி மீண்டும் இவ்விரதத்தை முறைப்படி அனுஷ்டித்து நன்மை பெற்றதுடன், விக்கிரமாதித்தனையும் சென்று சேர்ந்தாள்.

இவ்விரதத்தினை 21 வருடம் அனுஷ்டித்த பின் உத்தியாபனம் செய்து முடிக்கலாம். இயலாதவர்கள் ஏழு வருடமாவது கைக்கொள்ளலாம்.

எல்லோருக்கும் எளியனாக அருள்தரும் விநாயகரை வழிபட்டு சகல சித்தியும் பெற்று வாழ்வோமாக.

* * * * * * *

உ
கணபதி துணை

# கந்தவேளைத் துதிப்போர்க்கு வல்வினைபோம்!

"ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய", அமரர் இடர் தீர அமரம் புரிந்த, குமரன் அடியை நம்பித் துதிப்போர்க்கு வல்வினை போம்; துன்பம்போம்; நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித் தோங்கும் என்கிறது கவசம். எங்கள் கந்தபிரான் வாசவன் மருமகன்; நேசக் குறமகன் நினைவோன், ஆறுமுகம் படைத்த ஐயன். அணிமுடி ஆறும் நீறு இடு நெற்றியும் நீண்ட புருவமும் பன்னிரு கண்ணும், பவளச் செவ்வாயும், நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும், ஈராறு செவியில் இலகு குண்டலமும், ஆறிரு திண்புயத் தழகிய மார்பில் பல்பூஷணமும் பதக்கமும் தரித்து நிற்கும் அழகிய கோலத்தை நாம் காண்கின்ற போது எம்மை மறந்த நிலையில் இருந்திடுதல் இயல்பு; அவன் அழகைக் காண ஆயிரம் கண் கொண்டிலனே என ஏங்காத நெஞ்சமே இராது. அமராபதியைக் காத்து தேவர்கள் கடுஞ்சிறை விடுத்த கந்தனை, கதிர் வேலவனை கார்த்திகை மைந்தனை இடும்பனை அழித்த இனிய வேல் முருகனை மனதில் இருத்திக் கொண்டால் எம்மை துன்பமே அணுகாது. இன்பமே பெருகும். முருகன் தமிழர் தம் தெய்வம். குன்றுதோறாடு குகன் குறிஞ்சித் தெய்வம். தமிழ் இனம் என்று தோன்றியதோ அன்றே முருக வழிபாடும் தோன்றிவிட்டது எனலாம். கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் மத்தியில் இவ்வழிபாடு காணப்பட்டதென்பர் கற்றறிந்தோர். தமிழருக்கேயுரிய பெருங்கற் பண்பாட்டோடு தொடர்புடையது முருக வழிபாடு. பெருங்கற் பண்பாடு தமிழருக்கு உரியது என்பது வரலாற்று ஆய்வாளர் கருத்து.

முருகன் பற்றிய செய்திகள் சங்க கால நூல்களிலேயே இடம் பெற்றுள்ளன. புறநானூற்றிலே மணி மயில் உயரிய மாறா வென்றிப் பிணிமுக வூர்த்தி ஒண் செய்யோனும் என்ற குறிப்பு காணப்படுகின்றது.

அகநானூற்றிலே "முருகன் அன்ன சீற்றத்து" என்ற குறிப்பு காணப்படுகின்றது. ஐங்குறு நூறு "முருகென மொழியும் வேலன்" என்று குறிப்பிடுகின்றது. பொருநராற்றுப் படை "முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்" என்கின்றது. பரிபாடலிலே 31 பாடல்கள் முருகன் புகழ் கூறுகின்றன. இவ்வாறாக முருக வழிபாட்டை ஆராய்கின்றபோது முருக வழிபாட்டின் வரலாறே தமிழர் வரலாறு என்பது தெளிவாகும். தொல்காப்பியனார் கூட முருகனைத் தமிழருடைய குறிஞ்சி நிலத் தெய்வமாகவே போற்றுகின்றார். "சேயோன் மேய மைவரை உலகமும்" என்ற குறிப்பு தொல் காப்பியத்தில் காணப்படுகின்றது.

சேய் நாடு என்று வர்ணிக்கப்படுகின்ற எமது இலங்கை வள நாட்டில் கூட பழங் குடித் தமிழர்கள் முருகனை வழிபட்டு வந்திருக்கின்றார்கள் என்பதற்கு ஆதாரம் நிறைய உண்டு. சில ஆண்டுகளுக்கு முன்பு புத்தளம் மாவட்டத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் போது அதிசயிக்கத் தக்க பல தகவல்கள் கிடைத்துள்ளன. இங்கு கிடைத்த ஈமத் தாழிகளும் சேவலின் சிலையும் தக்க சான்றுகளாக இருப்பதை நாம் காணலாம். இத்தகைய சின்னங்கள் தெற்கே வளவை கங்கை பள்ளத் தாக்கிலும் மேற்கில் பொன் பரிப்பு என்ற இடத்திலும் கிழக்கே கதிர வெளியிலும் வடக்கே வல்லிபுரம் போன்ற இடங்களிலும் காணப்படுவதால் இலங்கை முழுவதிலும் முருக வழிபாடு பரந்திருந்தது என்பது தெளிவு. இவ்விடங்களில் எல்லாம் ஒரு காலத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்தார்கள் என்பதையும் இத்தகவல்கள் சுட்டிக் காட்டுகின்றன. சிங்கள மன்னர்கள் கூட கதிர்காமத்துறையும் வள்ளி மணாளனை போற்றிப் பரவினார்கள் என்பதனை

ராஜாவளிய போன்ற சிங்கள நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. இன்றும் சிங்கள மக்கள் கத்தர கம தெய்யோவுக்கு அஞ்சியே வாழ்வர். தமிழர் வாழ்க்கையில் தான் கூடுதலான தாக்கத்தை முருக வழிபாடு ஏற்படுத்திற்று. கந்தன் பெயரில் எத்தனை ஊர்களுண்டு? கந்தவனக் கடவை, குமரக் கோட்டம், கந்தரோடை என்பன கந்த வழிபாட்டால் பிறந்தவையல்லவா? வழிபாட்டு முறையில் தான் எத்துணை ஒற்றுமை? கதிர்காம கப்புறாளைகளின் பூஜை முறையை நாம் செல்வச் சந்நிதியில் காணவில்லையா? கந்தபுராணக் கலாசாரம் என்று நாம் பேசுவதில்லையா? பெயர்களில் கூட முருக வழிபாட்டின் தாக்கம் காணப்படுகின்றது அல்லவா? கந்தசாமி கந்தையா, கந்தப்பு குருநாதன், சிவகுருநாதன், கார்த்திகேயன் என்பன உதாரணங்கள்.

இவ்வாறாக இலங்கை மக்களுடைய வாழ்வில் எந்தத் துறையை நாம் ஆய்கின்றபோதும் கந்தவேள் வழிபாட்டின் தாக்கத்தை நாம் காணக்கூடியதாய் உள்ளது.

எமது நாட்டிலே அமைதியையும் இனங்களிடையே நல்லிணக்கத்தையும் சமாதான சக வாழ்வையும் உருவாக்க வல்லது முருக வழிபாடு. கதிர்காமத்துக்குச் சென்றால் இதன் உண்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம். கதிர்காமத் திருவிழா என்றால் அங்கு எல்லோரும் முருகனடியார்களாகவே காட்சி தருவர். இன வேற்றுமை இராது. கந்தவேளின் பாத கமலங்களை நோக்கி வழிபட்டுக் கொண்டே எல்லோரும் இருப்பர். கந்தனின் அருளாசியைப் பெற வேண்டும் என்பதே எல்லோரினதும் இலட்சியமாக இருக்கும். இந்நிலை என்றும் நிரந்தரமாக நிலவுகின்ற போது எங்கே வேற்றுமை எழப் போகின்றது. பிரச்சினை தோன்றப் போகின்றது?

> "ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க
> வெற்றைப் கூறு செய்தனி வேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
> ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
> மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

ஆர். சிவகுருநாதன் எம். ஏ., சட்டத்தரணி
ஆசிரியர், தினகரன்.



உ
ஓம் கணபதி துணை

# காளி அம்பாள்

ஸ்ரீ காளி என்பது கறுப்பு நிறமுடைய தேவி எனப் பொருள்படும். கறுப்பு நிறம் தாமத குணத்தைக் குறிப்பது. சிவபிரான் செய்யும் பஞ்ச கிருத்தியங்களில் சங்காரத் தொழிலுக்குரியவர் காளியாவாள். சங்காரமே இரட்சகமும் ஆகும். எங்கு தீமைகள் மிகுத்து வருகின்றதோ அங்கு அவைகளை அழித்து நன்மைகளைத் தோற்றுவிக்கச் சங்காரத் தொழிலை மேற்கொள்ளுகிறாள்.

மனிதர்களிடத்து ஆணவம், கோபம், அழுக்காறு, தற்பெருமையாகிய அசுர குணங்கள் தோன்றிய போதும், நோய், துன்பம் தோன்றிய போதும் அவைகளை அழித்துக் காக்கின்றவள் காளி தேவியாகும்.

தேவி மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது யாதெனில் மூவுலக மாதாவாகிய அன்னை செல்வத்தைக் கொடுக்கப் பொன்னிறமான லக்ஷ்மியாகவும், கல்வி ஞானத்தைக் கொடுக்க வெண்ணிறமான சரஸ்வதியாகவும், சத்துருக்களை அழிக்க நீலநிறமான துர்க்கை, சண்டிகை, காளி என்றும் விளங்குகின்றாள் என்பதாம்.

எல்லா மதத்தவர்களும் வழிபடும் தேவி ஒருவளே என்று கூறப்படுகிறது. இப்படி எல்லாமாக விளங்கும் சக்தி உயர் நிலையில் வாலை, திரிபுரை, புவனை என விளங்குகின்றாள். இவையெல்லாம் மஹாதேவியின் ஒளிக்கிரணங்களாகவும் அங்க உபாங்கங்களாகவும் விளங்குகின்றன. சாக்த நெறியில் காளி, தாரா, ஷோடசீ, புவனேஸ்வரி, பைரவி, சின்மஸ்தா, தூமாவதி, பகளாமுகீ, மாதாங்கீ, கமலா என பத்து உபாசனைப் பிரிவுகளைக் கூறப்படுகிறது.

இவற்றுள் முதலாவது காளி உபாசனையே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், காளிதாசர் முதலியோருக்குச் சாதனையாக இருந்தது. காளியின் வழிபாட்டால் ஒருவன் உலகில் தலைவனாகவும், கல்வி, செல்வம், வேதவித்தை, ஞானகுருத்துவம், எல்லா யாகம் செய்த பலனையும் அடையலாம் எனக் காளிகோ உபநிஷதங்கள் கூறுகின்றன.

சர்வசத்திமயமான பரம்பொருளுக்கு பல்வேறு ஒளிமயமான சக்திகள் உண்டு. ஒருவன் தன் மனோதத்துவத்தினால் தன்வசமாக்கி ஆற்றல் பெறலாம். அவை கணபதி, முருகன், சிவன், விஷ்ணு, பத்ரகாளி, துர்கை என வெவ்வேறு உருவம் கொண்டு தியானித்தாலும் அவ்வடிவில் அவர்கட்கு அநுக்கிரகம் கிடைக்கும்.

காளியின் தோற்றம் பற்றி தேவிபாகவதத்தில் தக்ஷயாகத்தை அழிப்பதற்காக வீரபத்திரப் பெருமானின் சக்தியாகத் தோன்றினார் என்றும் கூறப்படுகிறது. இன்னொருவேளை நவராத்திரிகால அஷ்டமியில் அசுரரை அழிக்கத் தோற்றினாள் என்றும்; இன்னொரு வேளை காலகாலராகிய மகாகாளரின் சக்தியே மகாகாளி என்றும், பிரத்தியங்கிரா என்ற சர்வேஸ்வரருடைய சக்தி எனவும் புராணங்களில் பலவிதமாகக் கூறப்படுகிறது.

காளியின் வடிவம் நாலுகை, எட்டுக்கை, பத்துக்கை, பதினெட்டுக்கை என்றும் கூறப்பட்டுள்ளது.


நவராத்திரி காலங்களில் மகாகாளி, மகாலஷ்மி, மஹாசரஸ்வதி என்பவற்றின் வடிவமே சாமுண்டி எனவும், சண்டிகாதேவி எனவும் கொள்ளப்படும். இலங்கையில் பல இடங்களில் சாமுண்டி அல்லது காளி கோவில்கள் ஆங்காங்கு இருக்கின்றன.

முற்காலத்தில் பெரிய கோவில்கள் அமைப்பவர்கள் நகரப் பாதுகாப்புக்காகவும் நோய் துன்ப நிவாரணத்திற்காகவும் பிரதான கோவிலின் பக்கத்தில் காளி, மாரி, ஐயனார், வீரபத்திரர் முதலிய தெய்வங்கட்குக் கோயில் கட்டி வழிபாடு செய்தார்கள்.

இவ்வகையில் களனிகங்கா சாகரமுகத்துவாரப் பகுதியில் ஸ்ரீ சர்வார்த்த சித்திவிநாயகப் பெருமானின் முன்றிலமர்ந்து பக்தர்களின் சர்வாபீஷ்டங்களையும் அருள்புரியும் அன்னை ஸ்ரீ காளிதேவியின் அருளை இந்த மஹாகும்பாபிஷேக வைபவத்தில் நாமெல்லோரும் போற்றிப் பேரானந்தமடைவோமாக.

சிவம்பவது

பிரதிஷ்டாகுரு
ஈசானசிவ சி. குஞ்சிதபாதக் குருக்கள்
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்,
கொழும்பு.



# நன்றி

முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர், மகா காளி அம்பாள் ஜீர்னோத்தார்ண புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் மங்களகரமாக நிகழ்வதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொண்டு நிருவாகப் பொறுப்பினை ஏற்றுச் சிறப்புடன் செயலாற்றிய பரிபாலன தருமகர்த்தா சிவநெறிச் செல்வர் திரு. ஆ. சின்னத்தம்பி ஜே. பி. அவர்களுக்கும், ஆர்வத்துடன் ஒத்துழைத்த ஏனைய தரும பரிபாலன சபை உறுப்பினர்கள் திரு. கே. சின்னத்தம்பி, திரு. கே. கணேஸ்வரன் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றி உரித்ததாகிறது. அமரர் சங்கரப்பிள்ளை செல்லமுத்து அவர்கள் 1955 முதல் 1993 வரை தருமகர்த்தாவாக கடமையாற்றியதை நன்றியறிதலுடன் நினைவு கூருகின்றோம்.

திருப்பணி வேலைகளைச் செம்மையாக மேற்பார்வை செய்து சிறப்புற நிருவகித்த கலாநிதி ஆ. சி. குணசிங்கம் அவர்களுக்கு விசேடமாக எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கும்பாபிஷேகப் பெருவிழாவை ஆகம முறைப்படி நிறைவேற்றுவதற்குப் பிரதம சிவாச்சாரியாராகத் தலைமை தாங்கும் சிவபூஜா துறந்தார் ஈசானசிவ சி. குஞ்சிதபாதக் குருக்களுக்கும், சர்வபோத காச்சாரியர் தெய்வீக மாமணி பேராசிரியர் சிவஸ்ரீ. கா. கைலாசநாதக் குருக்களும், சர்வகாதகாச்சாரியர் சிவஸ்ரீ. விஸ்வநாராயண சர்மா அர்களுக்கும், ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ. எஸ். இராமச்சந்திரக் குருக்கள் அவர்களுக்கும், கும்பாபிஷேகக் கிரிகைகளிற் பங்குபற்றும் ஏனைய சிவாச்சாரிய பெருமக்களுக்கும் ஏனைய குருமார்களுக்கும் இதயம் கனிந்த நன்றி உரித்தாகிறது.

எமது கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்வதற்கேற்ற வகையில் வாரி வழங்கிய வள்ளல்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலயத் திருப்பணி வேலைகளை அழகுற நிறைவேற்றிய சிற்பாசாரியார் ஸ்ரீ. எஸ். எஸ். மகேஸ்வரன் குழுவினரது சேவையை நன்றியறிதலுடன் நினைவு கூருகின்றோம்.

கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரை, வாழ்த்துச் செய்தி, விநாயகர் பஞ்சகம், கட்டுரை, விளம்பரங்கள் ஆகியன தந்துதவிய அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மங்கள இசையால் கும்பாபிஷேக விழாவைச் சிறப்பிக்க வருகை தந்திருக்கும் நாதஸ்வர வித்துவான் நாதஸ்வர கலாமணி அளவையூர் எம். பி. பாலகிருஷ்ணன், தவில் வித்துவான் லயமாமணி இணுவில் எஸ். புண்ணியமூர்த்தி குழுவினருக்கும்,தேவஸ்தான வித்துவான் எம். பழனிவேல் குழுவினருக்கும் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை வெளியிட்டும், சிறப்பு மலரைப் பிரசுரித்தும் எமது ஆலயச் சிறப்புக் கட்டுரையை மக்கள் அறியும்படியும் செய்த வீரகேசரி பத்திரிகை காரியாலயத்திற்கும் சிறப்பாக, பிரதம ஆசிரியர் திரு. ஆ. சிவனேசச் செல்வன், உதவி


ஆசிரியர் திரு. பொ. இராஜகோபால், திரு. எஸ். சுதாகரன் ஆகியோருக்கும், தினகரன் ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன் அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகிறது.

கும்பாபிஷேக மலர் விரைவில் வெளிவருவதற்கு உதவி செய்து அழகுற அச்சிட்டுதவிய யூனைட்டெட் மேச்சன்ஸ் லிமிட்டெட், கொழும்பு 13, அச்சகத்தாருக்கும் பணியாளர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிக்கின்றோம்.

எமது கும்பாபிஷேக நிகழ்ச்சிகளுக்கு வருகை தந்து, ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானையும், காளி அம்பாளையும், ஸ்ரீ அகிலாண்ட நாயகி சமேத ஜம்புகாத சுவாமிகளையும், வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியையும், ஏனைய பரிவார மூர்த்திகளையும் தரிசித்து எண்ணெய்க் காப்பிட்டுக் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளிற் பங்குபற்றிய பக்த கோடிகளுக்கு எமது நன்றி உரித்தாகிறது.

ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகப் பெருவிழா இனிது நிறைவுபெறத் தனித்தும் ஒருமித்தும் பலவகையிலும் தங்களாலியன்ற உதவி செய்த அன்பர்கள், அடியார்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானதும், காளி அம்பாளதும் அளப்பருங் கருணையினாலே மகா கும்பாபிஷேகத்தைக் காணும் பேறுபெற்ற அனைவருக்கும், நாட்டுக்கும் சாந்தி, சமாதானம், அமைதி, ஒற்றுமை ஆகியவற்றுடன் அனைவருக்கும் இகபர சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து எமது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகப் பெருமானது பாதாரவிந்தங்களுக்கு வணக்கம்.



*With Compliments*

# AMBIGA

## JEWELLERS (PTE) LTD.

**77, Sea Street, Colombo 11. Tel: 422839, 434954.**

*With Compliments*

# AMBALS
# JEWEL HOUSE
# &
# PAWN BROKERS

**JEWELLERY & GEM MERCHANTS**

**49, SEA STREET,**
**COLOMBO 11.**

☎ **326241 / 432704**

*With Compliments*

**Central Trading Company**

General Merchants, Shopping Bags, Pora Bags, Polythene Bags,
Drinking Straws, Grocery Bags and Marketing Bags.

62, SRI KATHIRESAN (Chekku) STREET,
COLOMBO 13.
Phone: 446499

---

*With Compliments*

**GLORCHEM ENTERPRISE**

**141, BANKHALL STREET**
**COLOMBO 11.**
**T' Phone : 327122, 423288**

With Compliments

*

*

*

*

# கோமதி விலாஸ்

***142,* செட்டியார் தெரு.**
***கொழும்பு 11.***

தொலைபேசி : 434144

*With Compliments*

# Free Lanka Granite & Marble Exports Ltd.

P.O. Box 125,
409, Galle Road,
COLOMBO 3.

Telephone : 575251 - 4
Telex : 575444

*With Compliments*

# Lanka Pharmacy,
# Rajagiriya.

**Phone: 86-3787**

* * * * * * * * * * *

---

*With Compliments*

# LETCHUMI JEWELLERS,

**444, GRANDPASS ROAD,**
**COLOMBO 14.**
**T' Phone : 431954**

**ලෙච්චුමි ජුවලර්ස්**
444, ග්‍රැන්ඩ්පාස් පාර,
කොළඹ 14.

**லெச்சுமி ஜுவலர்ஸ்,**
444, கிராண்பாஸ் ரோட்,
கொழும்பு 14.

*With Compliments*

▼

**New Sureka**
**Jewellers**
**&**
**S. Sathasivam Pawn Brokers**
**139, Sea Street, Colombo 11.**
**Telephone : 448092**

With Compliments

▼

▼

▼

**Geetha Jewellery**

**1 P, Sea Street Junction, Colombo 11**

**☎ : 447214**

*With Compliments*

# MIDLAND HARDWARES

**31A, GRANDPASS ROAD**
**COLOMBO 14.**

**T ' Phone: 447252**

---

*With Compliments*

# Pragash Jewellers (Pvt) Ltd.

**106, Pragash Complex,**
**Sea Street.**
**Colombo 11.**
**Phone : 329980**

*With Compliments*

★

★

★

★

★

★

★

★

★

# WELIGAMA STORES

**139, 4th Cross Street,**
**COLOMBO 11.**

**Telephone : 449319**

*With Compliments*

# Sri Anjala Jewellers

**FOR FINE 22kt GOLD JEWELLERY**

No. 11A, Sea Street, Colombo 11.
T' Phone: 327469

*With Compliments*

# New Libraa Jewellers

**Jewellers & Pawn Brokers**

නිව්
ලිබ්‍රා ජුවලර්ස්
74, හෙට්ටි වීදිය,
කොළඹ 11.

74, SEA STREET,
COLOMBO 11.
T' Phone : 431304

நியூ
லிப்ரா ஜுவலர்ஸ்
74, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

*With Compliments*

# VASANTHA

## JEWELLERY (PVT) LTD.

Telephone : 430624
Fax : 449319

11/20, GOLD PLAZA,
SEA STREET,
COLOMBO 11.

*With Compliments*

# ROHANLACK

Dealers in Dyes, Chemicals & Acids.

111, Bankshall Street,
Colombo 11.
Sri Lanka.
Phone: 422439.

**WITH BEST**

**WISHES**

*from*

*WELLWISHER*

*With Compliments*

# A Well Wisher

ஓம்

கணபதி துணை

"கருமம் செய ஒருவன் "கைதூவேன்" என்னும்
பெருமையின் பீடு உடையது இல்".

**ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தான**
**மகா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.**

* சகல சமய விழாக்கள்
* சுப நேரங்கள்
* பெரியோர்களின் தினங்கள்
* பொன்மொழிகள்
* திருக்குறள்

மற்றும் பல கண்கவர் வர்ணப் படங்களுடன்
வெளிவந்து விட்டது!





கொழும்பு தமிழ்ச் சங்கம் நூலகம்

*With Best Compliments*

# CIVICON
## ENGINEERS & CONTRACTORS

NO. 338, GALLE ROAD,
COLOMBO 6.

T' Phone : 502124

*WITH BEST COMPLIMENTS*

Lalitha

**Lalitha Jewellery Mart Ltd.**

Manufacturers of fine Jewellery since 1951

**105. Sea Street, Colombo 11, Sri Lanka.**
**Tel : 23691, 431993 Fax : 436343**

PRINTED BY UNITED MERCHANTS LTD., COLOMBO 13. TEL: 449688, 440524